இலங்கையில் செய்திப் பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது.

# தொழிலாளர் பாதை

2/-

மாதமிரு இதழ் — 408 1991 ஜுலை 12 வெள்ளிக்கிழமை

RECEIVED
26-8-2.9
Periodicals Division
Library

## பேர்லின் உலக தொழிலாளர் மகாநாட்டிற்கு ரூபா. 200,000 நிதி

ஏகாதிபத்திய யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1991 நவம்பர் 16 & 17ம் திகதிகளில் பேர்லினில் நடாத்த அழைப்பு விடுத்துள்ள உலகத் தொழிலாளர் மகாநாட்டினை வெற்றிகரமாக்க ரூபா. 200.000/- திரட்டுவதென புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் மத்திய குழு தீர்மானித்துள்ளது. இந்நிதியினை ஜுலை 7 — நவம்பர் 16 திகதி வரையிலான 4 மாதங்களுள் திரட்ட வேண்டியுள்ளது.

நான்காம் அகிலத்தின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம், இம்மகாநாட்டினை கட்டி எழுப்பும்

(2-ம் பக்கம் பார்க்க)

# தோட்டத் தொழிலாளர் தலைவர்களை விடுதலை செய்!

மலையக மக்கள் முன்னணி தலைவர் பீ சந்திரசேகரம், உப-தலைவர் பீ. எச். தர்மலிங்கம்; செயலாளர் பீ. ஏ. காதர் பொலிசாரால் கைது செய்யப்பட்டதை வன்மையாகக் கண்டனம் செய்யும புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அவர்களை உடனடியாக விடுதலை செய்யும் பிரச்சாரத்தில் இறங்குமாறு தொழிலாளர் இயக்கத்தினை வேண்டுகின்றது,

மலையக மக்கள் முன்னணித் தலைமையின் தொழிற்சங்கவாத, குட்டி முதலாளித்துவ அரசியலுடன் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஆழமான கருத்து வேறுபாடுகள் கொண்டுள்ளது. பு. க. க. இந்தத் தலைமைக்கு எதிராக நீண்ட அரசியல் போராட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளது. அப்போராட்டத்தில் காலூன்றிய வண்ணம் சந்திரசேகரம் உட்பட தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டமையானது பிரேமதாச அரசாங்கம் தோட்டத் தொழிலாளர்களுக்கும் பொதுவில் முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும் எதிரான கொலைகாரத் தாக்குதலை புதிய மட்டத்துக்கு உயர்த்தியுள்ளது எனப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் சுட்டிக் காட்டுகின்றது. சகல தொழிலாளர்களும் இந்த ஆபத்தினை இனங்கண்டு கொண்டாக வேண்டும்.

ஜுலை 7-ம் திகதி சந்திரசேகரம் உட்பட்ட தலைவர்கள் ஒரு பொலிஸ் கோஷ்டியினால் கடத்திச் செல்லப்பட்டனர். ஜுன் 21ம் திகதி கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பினை ஏற்பாடு செய்ததாகப் பொலிசார் குற்றம் சாட்டியுள்ள வரதனுக்கு உதவினர் என்ற பெரிதும் குழப்பமான குற்றச் சாட்டினை இவர்களின் தலையில் கட்டி அடித்துள்ளனர், இந்தத் தொழிற்சங்கத் தலைவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இடத்தினைக் கூட பொலிசார் தெரிவிக்க மறுத்துள்ளனர்.

### சதி

வரதனுடன் தொடர்பு இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன சந்திரசேகரம், தர்மலிங்கம், காதர் கைது செய்யப்பட்டமை தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான யூ. என், பி, அரசாங்கத்தின் சதியாகும். இந்தத் தலைவர்கள் யூ. என். பி. அரசாங்கத்திற்கு எதிராகத் தொழிலாளர்களை அணி திரட்டுவதில் ஈடுபட்டு வந்தவர்கள் அல்லர், எனினும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிராகக் கொடிய பயங்கரத் தாக்குதலைத் தொடுக்க தமிழர் விரோத இனவாதிகளுக்கு வாய்ப்பினைச் சிருஷ்டிப்பது அவசியமாகியுள்ளது. இது எத்தகைய அசிங்கமான கோலம் எடுத்துள்ளது தெரியுமா? பிரேமதாச அரசாங்கத்தின் பத்திரிகைகள் முன்னணி ஏகாதிபத்தியச் சார்புத் தலைவியான சிரிமாவோ பண்டாரநாயக்காவும் அவரது முதலாளித்துவ சி. ல. சு. க.வும் 'தமிழீழ விடு

**ஆசிரியர் குழு அறிக்கை**

தலைப் புலிகளுக்கு உதவும்' சந்திரசேகரத்துடன் உறவு கொண்டுள்ளன என்ற கடைகெட்ட பிரச்சாரத்தின் மூலம் இனவாதக் கொதிப்புக்குத் தணல் வளர்த்து வருகின்றன.

தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் கைது செய்யப்பட்ட 4 நாட்களுக்கு பின்னர் மத்திய வங்கி ஆளுனர்மத்திய வங்கிக் கட்டிடத்தில் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாகத் தொழிற்பட்டு வந்த மத்திய வங்கி ஊழியர் சங்க அலுவலகத்தினை பலாத்காரமாக உடைத்து நொருக்கி அதன் தளபாடங்களை வேறோர் கட்டிடத்துக்கு மாற்றியுள்ளது.

### பொலிஸ் தடை

இதற்கிடையே ஜுலை 4ம் திகதி இடம் பெறவிருந்த தொலைத் தொடர்பு ஊழியர் சங்கத்தின் கூட்டம்பொலிசாரால் தடை செய்யப்பட்டது. சங்கத் தலைவர்கள் வாய் வதந்தி பரப்புவதில் ஈடுபட்டு வருகின்றார்களேயன்றி, உண்மைச் சம்பவம் வெளியாவதை தவிர்த்து வருகின்றார்கள். விடுதலைப் புலிகள் கொழும்பில் மேலும் குண்டுகளை வெடிக்க வைக்கப் போகிறார்கள் என்ற பீதியைப் பரப்புவதன் மூலம் அரசாங்கம் முப்படைகளதும் பொலிசாரதும் நிரந்தரப் பாய்ச்சல்களுக்கும் தேடுதல்களுக்குமான நிலைமையைச் சிருஷ்டிப்பதில் குவிந்துள்ளார்கள்.

பிரேமதாச அரசாங்கம் இங்ஙனம் பயங்கர இயக்கத்தினை முன்னெடுத்துச் செல்ல தயாராகுவதன் காரணம் என்ன? இதற்கான பின்னணி என்ன? இதனை எந்தவொரு தொழிலாளியும், ஒடுக்கப்படும் மக்களும் புரிந்து கொள்ள முடியும். தனியார்மயமாக்கம் பற்றிய செய்தி பரவியதுதான் தாமதம் முழுத் தோட்டத் துறையும் கிளர்ந்து எழுந்துள்ளது. தனியார்மயமாக்கம் எனப்படுவதன் மூலம் 10 இலட்சத்துக்கும் அதிகமான தொழிலாளர்களின்தொழில், சம்பளம், வாழ்க்கைத் தரம், சேவை நிலைமைகள் சுக்கு நூறாக்கப்படும் என்பதைத் தொழிலாளர்கள் அறிவர். ஆசியாவிலேயே பெரும் அரச தொழிலமைப்பாக கணிக்கப்படும் 425,000 ஹெக்டேயர் கொண்ட தோட்டத்துறையை தனியார்மயமாக்கும் அமைச்சரவை அறிக்கை மிகவும் அந்தரங்கமாகத் தயார் செய்யப்பட்டுள்ளது. மஹாராஜா, ஹேலீஸ், லங்கெம்,

(2-ம் பக்கம் பார்க்க)

# 'இளம் சோசலிஸ்டுகள்' 10வது தேசிய மகாநாட்டில் பங்குகொள்ளுங்கள்

புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் இளைஞர் இயக்கமான 'இளம் சோசலிஸ்டுகள்' தமது 10வது தேசிய மகாநாட்டினை ஜுலை 28ம் திகதி கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடாத்துகிறார்கள். இம்மகாநாட்டில் கலந்து கொள்ளுமாறு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோசலிஸ்டுகளும், தொழிலாளர்பாதையும் சகல இளைஞர்களையும் வேண்டிக் கொள்கின்றன.

இளம் சோசலிஸ்டுகளின் முன்நோக்கு, உலகஏகாதிபத்திய அமைப்பின் இன்றைய நெருக்கடி, அது இந்தியத் துணைக் கண்டப் பிராந்தியத்திலும் அதன் ஒரு பாகமாக




இலங்கையிலும் வெளிப்பாடாகியுள்ள முறைமை, ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் உலக யுத்தத்திற்கும் காலனிகள் ஆட்சிக்கும் தயாராகும் விதம், உலக தொழிலாள வர்க்கத்தின் எதிரில் உள்ள புரட்சிகரப் பணிகளை ஆய்வு செய்துள்ளது. இதன் அடிப்படையில் இலங்கை — தமிழ் ஈழ இளைஞர்களுக்கென அபிவிருத்தி செய்யப்பட்ட முன்நோக்கும், வேலைத்திட்டமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

விவசாயி இளைஞர்கள், தொழிலாளி இளைஞர்கள் மாணவர்கள், ஒடுக்கப்படும் இளைஞர்கள் என்ற வகையில் இளைஞர்களின் சகல பிரிவினரும் முகம் கொடுக்கும் நெருக்கடியையும் பிரச்சினையையும் ஆய்வு செய்யும் இம் முன்நோக்கு அவற்றுக்கு தீர்வு காண்பதானது உலக ஏகாதிபத்தியத்தினை தூக்கி வீசி, உலக சோசலிசப் புரட்சியின் ஒருபாகமாக இலங்கையினுள் சோசலிச வேலைத்திட்டத்தினையும் ஒடுக்கப்படும் மக்களின் ஜனநாயகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வேலைத் திட்டத்தினையும் அமுல் செய்வதுடன் பிணைந்து கொண்டுள்ளதென குறிப்பிடுகின்றது. யூ. என், பி. அரசாங்கத்தினைத் தூக்கி வீசி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிசக் குடியரசினை அமைக்கும்பொருட்டு தொழிலாள வர்க்கத்துடன் கை கோர்த்து போராட்டத்தில் இறங்கும்படி 'இளம் சோசலிஸ்டு'களின் இந்த முன்நோக்கு அறிக்கை கேட்டுக் கொண்டுள்ளது.

### தலைமை நெருக்கடி

இந்த வரலாற்றுப் பணியில் கைவைக்கும் இளைஞர்கள், மூலோபாய பணிக்கு முகம் கொடுக்கின்றார்கள். அவர்கள் தொழிலாள வர்க்கத் தலைமை நெருக்கடி பிரச்சினையைத் தீர்த்து வைக்க வேண்டியுள்ளது. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு இப்பணிக்குத் தோள் கொடுக்கின்றது, உலகம் பூராவும்இப்பணியை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு அனைத்

(7-ம் பக்கம் பார்க்க)

**வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தை வெளியேற்று!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பலாங்கொடை கூட்டுறவு ஊழியர்கள் சங்கக் கூட்டம்:

# பேர்ளின் உலக தொழிலாளர் மகாநாட்டுக்கு பேராதரவு

ஜூன் 3ம் திகதி கூடிய கூட்டுத்தாபன, கூட்டுறவு வர்த்தக ஊழியர் சங்கத்தின் அம்பலாங்கொடைக் கிளை நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்ளின் நகரில் இடம் பெறவிருக்கும் உலகத் தொழிலாளர் மகாநாட்டுக்குப் பேராதரவு வழங்கும் பிரேரணையை ஏகமனதாக நிறைவேற்றியது.

இப்பிரேரணை ''ஏகாதிபத்திய காலனித்துவத்தின் புதிய ஈர்ப்புசுளுக்கும் உலக யுத்தத்துக்கும் எதிராக முதலாளி வர்க்க ஆட்சியைத் தூக்கி வீசி, சோசலிச வேலை திட்டத்துக்குத் தன்னைஅர்ப்பணம் செய்து கொண்ட தொழிலாளர் — விவசாயிகள் அரசாங்கத்தினைக் கட்டி எழுப்பத் தொழிலாள வர்க்கத்தினைத் தயார் செய்யும் போராட்டத்துக்குப் பூரண ஆதரவு வழங்கும் இம் மகாநாடு, நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு உலக யுத்தத்துக்கும் காலனித்துவத்துக்கும் எதிராக நவம்பர் 16—17ம் திகதிகளில் பேர்ளினில் நடாத்தும் உலக தொழிலாளர் மகாநாட்டுக்கு பேராதரவு வழங்குகின்றது.'' எனக் குறிப்பிடுகின்றது.

அம்பலாங்கொடைத் தொழிலாளர்கள் எடுத்துள்ள இந்த முதலடியை முழுத் தொழிலாள வர்க்கமும் பின்பற்றவேண்டும் என நாம் வேண்டுகின்றோம்.

எதிர்பார்க்கப்பட்ட விதத்தில் இந்தப் பிரேரணைக்கு கூ, கூ. வ. ஊழியர் சங்கத் தலைமைப் பீடத்திடம் இருந்து எதிர்ப்புக் கிளம்பியது.

இந்த தொழிலாளர் மகாநாட்டுக்கு 1.45 மணி காலதாமதமாகி வந்த நவசமசமாஜக் கட்சிப் பொதுச் செயலாளர் விக்கிரமபாகு கருணாரத்ன 'பிரேரணை நிறைவேறவில்லை' என்றார், 'பிரேரணை நிறைவேறியதன் பின்னர் சுணங்கி வந்ததற்கு நாம் பொறுப்பு இல்லை'' என சங்க அங்கத்தினர்கள் அவருக்குப் பதிலளித்தனர். நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவுக்கு ஆதரவாகப் பிரேரணை நிறைவேற்றுவது சங்க அரசியலமைப்புக்கு முரணானது என விக்கிரமபாகு கருணாரத்ன ராகம் பாடினார். விட்டுக் கொடுக்காத அங்கத்தினர்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக அனைத்துலகப் பாட்டாளி வர்க்கத்தின் அத்தகைய உலகலாவிய நடவடிக்கைக்கு ஆதரவு காட்டுவதை தடை செய்யும் சரத்தினை வாசித்துக்காட்டும்படி அவரை சவால் செய்தனர். இதனால் விக்கிரமபாகு கருணாரத்னவின் வாயடைபட்டது.

ஏர்ணஸ்ட் மண்டேலின் போலிஅனைத்துலகத்திற்குப் புதிதாகச்சேர்த்துக்கொள்ளப் பட்டிருப்பது, இத்தகைய கடைகெட்ட சந்தர்ப்பவாத, பிற்போக்கு, அனைத்துலக விரோத நவசமசமாஜக் கட்சியே.

இந்த அரைக் காலனித்துவ நாடுகளில் ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய வாதிகளின் 'புதிய உலக அமைப்புக்கு' ஓத்தூதுகையில், தொழிலாள வர்க்கத்தினை இந்த பிற்போக்கு வர்க்கத்துடன் பிணைத்துப் போட தேசியவாத சந்தர்ப்பவாத தலைவர்களின் முயற்சிகளுக்கு எதிராகத் தொழிலாளர்கள் அனைத்துலகவாத பாதையில் இறங்கியுள்ளதைஅம்பலாங்கொடை தொழிலாளர்களின் நடவடிக்கை எடுத்துக்காட்டுகின்றது,

# கொக்கட்டிச்சோலையில் தமிழ் மக்கள் படுகொலை

## வடக்கு — கிழக்கில் இருந்து இராணுவத்தினை வெளியேற்று!

பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத ஆயுதப் படைகள் கொக்கட்டிச் சோலையில் நடாத்திய மனிதப் படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்யும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் தொழிலாளர் பாதையும் தமது ஆழ்ந்த கவலையை தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களிடம் தெரிவித்துக் கொள்கின்றது.

ஜூன் 12 புதன்கிழமை கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த மயிலடித்தீவு, முனைக்காடு, முதலைக்குடா கிராமங்களுள் பாய்ந்து விழுந்த கொக்கட்டிச் சோலை இலங்கைப் படையினர் கையில் அகப்பட்ட ஆண், பெண், குழந்தை குஞ்சு அனைத்தையும் வெட்டிக் கொத்திக் கொலைவெறியாடியுள்ளனர். சில குடும்பங்களைச் சேர்ந்த அங்கத்தினர்களை வீடுகளுக்குள் அடைத்துத் தீ வைத்துக் கொன்றுள்ளனர். அங்கிருந்துகிடைக்கும் தகவல்களின்படி 180க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளதோடு இவர்களுள் முதலைக்குடா பாடசாலையைச் சேர்ந்த 16 மாணவர்களும் அடங்குவர்.

சோவினிசப் படைகளின் இனவெறியாட்டத்தில் இருந்து தப்பிய பாடசாலை ஆசிரியை ஒருவர், 38 பேரின் சடலங்கள் நெருப்பினுள் தள்ளப்பட்டு சுட்டெரிக்கப்பட்டதை தான் கண்டதாகக் கூறியுள்ளார். அருகேயுள்ள அரிசி ஆலைக்குச் சமீபமாக 56 சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக மற்றொருவர் தெரிவித்துள்ளார். உயிர் தப்பிய விஷேந்த 6 பாடசாலை மாணவிகள் தாம் கற்பழிக்கப்பட்டு தாக்கப்பட்டதாக முறைப்பட்டுள்ளனர். இராணுவத்தினர் பல சிறுவர்களை எரிந்து கொண்டிருந்த வீடுகளுக்குள் தூக்கி வீசியுள்ளனர்.

### தீக்கிரை

குறைந்த பட்சம் 450 வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதோடு, பலத்த காயமடைந்த 24 பேர் பொலநறுவை மட்டக்களப்பு ஆஸ்பத்திரிகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இந்தக் காட்டுமிராண்டித் தாக்குதல் மீண்டும் எக்கணமும் இடம் பெறலாம் என்ற அச்சத்தால் ஆயிரக்கணக்கான மக்கள் காடுகளுக்குள் மறைந்து கொண்டுள்ளனர். நூற்றுக்கணக்கானோர் தாழங்குடா, ஆரையம்பதி முதலான கிராமங்களுக்கு அகதிகளாக ஓடித் தப்பியுள்ளனர்.

இப்படுகொலைகள் பற்றி ஆராய கமிட்டி நியமனம் செய்த பிரேமதாச, இராணுவப் பயங்கரங்களை மூடி மறைக்கும் மற்றுமோர் நடவடிக்கையாக ஜனாதிபதி பிரேமதாச 'சம்பவத்தை ஆயும்' கமிட்டி ஒன்றை நியமனம் செய்தது, விடுதலைப் புலிகள் இராணுவ ட்ராக்டரை வெடிகுண்டு வைத்து தகர்த்ததைத் தொடர்ந்தே இராணுவத்தினர் இப்பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் காட்ட முதலாளித்துவப் பத்திரிகைகள் முயன்றுள்ளன.

இவை எல்லாம் பொய்யானவை; மோசடியானவை. உண்மையில் கொக்கட்டிச் சோலைப் படுகொலைகள் இனவாத யுத்தம் ஆரம்பமாகி ஓராண்டு பூர்த்தியான தினத்தன்றே (12-6-1991) இடம் பெற்றுள்ளது, ஒரு தசாப்தத்துக்கு மேலாக இந்த யூ. என். பி. அரசாங்கம் நடாத்தி வரும் இனப்படுகொலைகளுள் அதிக எண்ணிக்கையான மக்களின் உயிர்களைப் பலி கொண்ட தனிச் சம்பவம் இதுதான். உண்மையில் இப்படுகொலைகள் தமிழ் விடுதலைப் போராட்டத்தினைச் சிதறடிக்கும் ஒரு நடவடிக்கையாக கிழக்கில் மக்களின் கொதிப்பு உச்சக் கட்டத்தினை அடைந்துள்ள ஒரு கட்டத்தில் இடம் பெற்றுள்ளது.

(6-ம் பக்கம் பார்க்க)

## பேர்ளின் உலகத் தொழிலாளர் ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனைத்துலக பொறுப்புக்கும்தோள்கொடுக்கும் பொருட்டு இலங்கை—தமிழ்ஈழம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்கள், கிளர்ந்து எழுவர்ர்கள் என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இதனை அம்பலாங்கொடை கூட்டுறவு தொழிலாளர் மகாநாடு (அறிக்கை 2ம் பக்கம்) நிரூபித்துள்ளது. வரலாற்று ரீதியில் நோக்கின் 1939 – 1944 இரண்டாம் உலக யுத்தத்தின் போது நான்காம் அகிலத்தின் இந்திய கிளையான போல்ஷிவிக் லெனினிஸ்ட் கட்சி ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஒரு ஆளோ அல்லது ஒரு சதமோ அல்லது ஒரு கருவியோ வழங்காதே என்ற நிலைப்பாட்டினைக் கடைப்பிடித்தது, இந்நிலைப்பாட்டுக்கு இலங்கைத் தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களிடமிருந்து பேராதரவு கிடைத்தது. இப்போராட்டம் தீவின் எல்லையையும் தாண்டிச் செல்லுமோ என பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் கிலி கொண்டிருந்ததை அவர்களின் அன்றைய தஸ்தாவேசுக்கள் ருசுப்படுத்தி உள்ளன.

இந்தியத் துணைக்கண்டத்தில் இந்திய சோசலிசலேபர் லீக்கின் தோழர்களுடன் இணைந்து பு. க. க. ஆரம்பித்துள்ள போராட்டம் இந்த வரலாற்று பாரம்பரியங்களை மீண்டும் புதுப்பிக்கும் மெருகூட்டும் என்பதில் எமக்கு உறுதியான நம்பிக்கை உண்டு. குறித்த கால எல்லைக்குள் இந் நிதியை பூர்த்தி செய்ய தாமதியாமல் அன்பளிப்புக்களை கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவும்:

ஆனந்த வக்கும்புர,
90. 1வது மாளிகாகந்தை லேன்,
கொழும்பு — 10.

## தோட்டத் தொழிலாளர் தலைவர்கள் ...

1-ம் பக்கத் தொடர்ச்சி)

மக்லூட்ஸ், சிலோன் ரொபாக்கோ காசன்கம்பர்ப்ச் முதலான உள்நாட்டு வெளிநாட்டு முதலாளித்துவக் கம்பனிகள் தோட்டங்களை தம் கைக்குள் போட்டுக் கொள்ள போட்டியிட்டு வருகின்றன, பிரித்தானியக் கம்பனி ஒன்று 200 கோடி மூலதனத்துடன் பாய்ந்து விழத் தயாராகி வருவதாகவும் தெரிகிறது.

சுமார் 1 இலட்சம் இந்திய 'பாஸ்போட்' கொண்ட தொழிலாளர்களை நீக்குவதும் புதிதாக வேலை வழங்காதிருப்பதும், தொழிற்சங்கத் தலையீட்டுக்கு முற்றுப் புள்ளி வைப்பதும், இந்தப் முதலாளித்துவக் கம்பனிகள் முன்வைத்துள்ள நிபந்தனைகளில் சிலவாகும். இதன் அர்த்தம் என்ன தெரியுமா? இலட்சோப லட்சம் தோட்டத்தொழிலாளர்களின் உயிர் [illegible] தோட்டக் கைத்தொழில் அமைச்சர் சுாமினி திசநாயக்காவின் காலத்தில் உலக வங்கிக் கட்டளையின் கீழ் தயார் செய்யப்பட்ட 'உபரி மனித வளங்களை அழித்தொழிக்கும்' நடவடிக்கை இன்று ஆரம்பமாகியுள்ளது.

தோட்டத் தனியார்மயமாக்கத்துடன் தொழிலாளர்கள் பலமாக மோதிக் கொள்கிறார்கள் என்பதை யூ. என். பி, அரசாங்கம் அறியும், அரசாங்கம் ஆரம்பித்துள்ள புதிய ஆத்திரமூட்டல் நடவடிக்கைகளின் ஆரம்பமாக விந்துலை கேம்பிரிஜ் தோட்டத் தொழிலாளர் இளைஞர்கள் இருவர் சமீபத்தில் உத்தியோக பூர்வமான கொலைகாரக் கும்பலினால் கடத்திச் செல்லப்பட்டதோடு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதனை எதிர்த்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்தக் கடத்தலுக்கு எதிராக தோட்டத்துறை பூராவும் வேலைநிறுத்தம் வெடிக்கும் நிலைமை உருவானது தான் தாமதம் 'ஒரு நாள் அடையாள வேலைநிறுத்தம்' பற்றி ஆராய்வதற்கென தோட்டத் தொழிற்சங்க கூட்டுக் கமிட்டியின் சந்திரசேகரம் உள்ளடங்கலான தலைவர்கள் இக் கைது செய்தல் சம்பவத்துக்கு மறுதினம் கூட விருந்தனர்.

பிரேமதாச அரசாங்கத்தில் தொடர்ந்து இருந்துவரும் தொண்டமான் — செல்லச்சாமி தலைமை முழுத் தொழிலாள வர்க்கத்துக்கும்எதிரான சதியில் நேரடிப் பங்கு கொண்டுள்ளனர், சந்திரசேகரம் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து தொண்டமான் தமது கையாட்களை தோட்டத்துறை பூராவும் உஜார் நிலையில் வைத்துள்ளார். 'வெளியில் இருந்து' தோட்டங்களுக்குள் வருபவர்களைப் பற்றி பொலிசாருக்கு உளவு பார்க்கும்படி தொண்டமான் தமக்கு கட்டளை

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனை ஏலத்தில் விட கொர்பச்சேவ் தயார்

இம்மாத நடுப்பகுதியில் லண்டனில் நடைபெற உள்ள எழுவர் குழுவின் (ஜி — 7) பொருளாதார உச்சி மகாநாட்டில் கலந்து கொண்டு, உரை நிகழ்த்த கொர்பச்சேவை அனுமதிப்பதென பெரும் ஏகாதிபத்திய நாடுகளின் தலைவர்கள் கூடிமுடிவு செய்துள்ளனர். அங்கு கொர்பச்சேவ், சோவியத் ரூஷ்யாவில் முதலாளித்துவத்தினைப் புனருத்தாரணம் செய்யும் பிற்போக்கு ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின் வேலைத்திட்டத்துக்கு ஏகாதிபத்தியத் தலைவர்களின் நேரடி உதவியைக் கேட்டுக் கொள்வார். அத்தோடு சோவியத் பொருளாதாரத்தினை முதலாளித்துவ உலகச் சந்தையின் நேரடிப் பிடிக்குள் கொணர்வதும் சோவியத் அதிகாரத்துவத்தின் திட்டமாகும்.

ஒரு சில கோடி டாலர் மேற்கத்தைய கடன் வசதிகளுக்காக சோவியத் ஸ்டாலினிச அதிகாரத்துவம், சர்வதேச நாணய நிதியத்தின் ஒரு ஏஜன்சியாகச் செயற்படத் தயாராகிக் கொண்டுள்ளது. அனைத்துலக வங்கிகளும். இராட்சத பன்னாட்டுக் கூட்டுத்தாபனங்களும் சோவியத் யூனியனை ஏகாதிபத்தியச் சுரண்டலின் களமாக்கிக் கொள்ள கொர்பச்சேவ் திட்டங்கள் கைகொடுக்கின்றன.

கொர்பச்சேவின் பொருளாதார ஆலோசகரான கிரிகோரியாவின்ஸ்கி, ஹாவார்ட் பல்கலைக் கழகத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் போலந்து 'அதிர்ச்சி வைத்தியத்தின்' சிற்பியான ஜிப்ரி சாக்ஸ் உட்பட அமெரிக்கப் பொருளியலாளர்களுடன் கலந்து கொண்டார். சோவியத் பொருளாதாரத்தினைப் படிப்படியாக முதலாளித்துவ



மிகைல் கொர்பச்சேவ்

ரீதியில் பரிணாமம் செய்ய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளை இவர்கள் வரைந்து கொண்டுள்ளனர்.

இதற்கிடையே கொர்பச்சேவ் ஒஸ்லோவில் (நோர்வே) நோபல் சமாதான பரிசுப் பேச்சினையும் நிகழ்த்தினார். 1990 அக்டோபரில் இந்த சமாதானப் பரிசு வழங்கப்பட்டதன் பின்னர்—இந்த 8 மாதங்களில் கொர்பச்சேவ் பால்டிக் நாடுகளின் சுயநிர்ணய உரிமையை நசுக்குவதிலும், வாழ்க்கைத் தரம் நாசமாக்கப்படுவதற்கு எதிரான சோவியத் தொழிலாளர்களின் கிளர்ச்சிகளை அடக்கி ஒடுக்குவதிலும் ஈடுபட்டார். அத்தோடு ஈராக் மக்களுக்கு எதிரான அமெரிக்க ஏகாதிபத்திய இனப் படுகொலை யுத்தத்துடன் மிகவும் நெருக்கமாகக் கலந்துறவாடினார், இவை எல்லாம் நோபல் பரிசுக் கமிட்டியிடமிருந்து கொர்பச்சேவுக்குச் சூடான வரவேற்பினை வென்று கொடுத்தன. உண்மையில் இந்தப் பரிசு, சர்வதேச முதலாளி வர்க்கத்தின் மிகவும் நாற்றம் கண்ட ஒரு ஊழியன் என்ற கோதாவிலேயே வழங்கப்பட்டுள்ளது.

'உலகச் சந்தைக்கு வழி திறக்கும் வகையிலும் அதன் ஒரு இணைந்த பாகமாகத் தொழிற்படும் விதத்திலும் எமது நடவடிக்கைகள் அமைய வேண்டும் என்பதை நாம் உணர்கின்றோம்'' என கொர்பச்சேவ் தமது உரையில் குறிப்பிட்டார். எழுவர் குழுவுடனும் ஐரோப்பிய சமூகத்துடனும் அனைத்துலக உறவுகளை வளர்த்துக் கொள்ளும் விதத்தில் சோவியத் ரூஷ்யாவின் புதிய சட்டங்கள் அமைய வேண்டும் என கொர்பச்சேவ் ஒஸ்லோ பேச்சில் வலியுறுத்தினார்.

## சுதந்திர வர்த்தக வலயம்

இந்தப் புதிய கட்ட உறவுகள் என்ன என்பதை மே மாதக் கடைப் பகுதியில் சோவியத் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட புதிய சட்டங்கள் எடுத்துக்காட்டியுள்ளன. இச் சட்டங்கள் சோவியத் ரூஷ்யாவை ஒரு இராட்சத 'சுதந்திர வர்த்தக வலயமாகத்' திருப்பும் சோவியத் அதிகாரத்துவத்தின் உஜார் நிலையை எடுத்துக் காட்டியுள்ளது. அதிகாரபூர்வமான 'டாஸ் நியூஸ் ஏஜன்சி'யின் படி பின்வரும் சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன:

★ பன்னாட்டுக் கம்பனிகள் நூறுவீத வெளிநாட்டு முதலீட்டுடன் நிறுவனங்களை அமைக்கலாம்.

★ வெளிநாட்டு முதலீட்டினைக் கொண்ட நிறுவனங்கள், 'லைசன்ஸ்' இல்லாமலே ஏற்றுமதி, இறக்குமதிகளைச் செய்யலாம். சுங்கவரிகள், ஏற்றுமதி இறக்குமதி வரிகளில் இருந்து பூரண விடுதலை வழங்கப்படும்.

★ வெளிநாட்டு முதலாளிகள் சோவியத் இயற்கை வளங்களைச் சுரண்டவும் சுதந்திர வர்த்தக வலயங்களை அமைக்கவும் சலுகைகள் வழங்கப்படும்.

★ வெளிநாட்டு முதலீடுகளுக்கு அச்சுறுத்தலாக உள்ள சட்டங்கள் அல்லது தேசியமயங்களுக்கு எதிராக சட்டரீதியான காப்பீடுகள் வழங்கப்படும்.

★ இலாபங்களை சோவியத் ரூஷ்யாவில் இருந்து வெளியே முழுமனே எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படும்.

## 'சோசலிசத்துக்கு' முழுக்கு

இதே சமயம் கொர்பச்சேவ் அதிகாரத்துவம் தனது ஏகாதிபத்திய அடிபணிவினை மீண்டும் உறுதி செய்யும் விதத்தில் சோவியத் ரூஷ்யாவின் பெயரில் இருந்து (U.S.S.R) 'சோசலிஸ்ட்' என்ற வார்த்தையை அகற்றியுள்ளது. கொர்பச்சேவுக்கும் ரூஷ்ய பாராளுமன்ற தலைவரான பொறிஸ் யெல்ஷினுக்கும் இடையே இடம்பெற்றபேச்சுவார்த்தைகளில் புதியதோர் ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இதன்படி 'சோவியத் சோசலிஸ்ட்' என்ற வார்த்தையை 'சோவியத் இறைமைக் குடியரசு' (சோவியத் சவறின் றிபப்லிக்) என மாற்றுவதென இணக்கம் காணப்பட்டது. கடந்த மார்ச்சில் நடாத்தப்பட்ட ஒரு கருத்துக்கணிப்பின்படி பெரும்பான்மையினர் 'சோசலிஸ்ட்' என்ற வார்த்தையைத் தொடர்ந்தும் கொண்டிருப்பதற்கு ஆதரவாக வாக்களித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கொர்பச்சேவின் இன்றைய கொள்கைகள், சோவியத் தொழிலாள வர்க்கம் பற்றி கொண்டுள்ள மரண பீதியினாலும் கிரேம்ளின் பொருளாதார கொள்கைகள் நிர்மாணித்துள்ள வாழ்க்கைத் தரத்தின் வீழ்ச்சி சிருஷ்டித்த கிளர்ச்சியின் வளர்ச்சியினாலுமே ஒட்டப்பட்டு வருகின்றன. 'தனிநாட்டில் சோசலிசம்' என்ற ஸ்டாலினிச கோட்பாட்டின் அடிப்படையில் சோவியத் பொருளாதாரம் வீழ்ச்சியின் விளிம்புக்குக் கொணரப்பட்டுள்ளது. இந்தப் போக்கு, அதிகாரத்துவத்தின் ஒட்டுண்ணி, நிர்வாகச் சீர்கேடுகளால் விரைவுபடுத்தப்பட்டுள்ளது என்பது உண்மையே. ஆனால் இது சோவியத் யூனியனதும், கிழக்கு ஐரோப்பாவினதும் பொருளாதாரங்கள், ஒருங்கிணைந்த உலகப் பொருளாதாரத்தின் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ளதே அடிப்படைக் காரணம்.

## லண்டன் மாநாடு

இதற்கிடையே சோவியத் ரூஷ்யாவின் பிரமாண்டமான சந்தையையும் உற்பத்தி இயலளவையும், மூலப் பொருட்களையும் யார் சூறையாடுவது என்பதில் ஏகாதிபத்திய வல்லரசுகளிடையே பெரும் மோதல் ஏற்பட்டுள்ளது. இதனால் லண்டன் மகாநாட்டில் கொர்பச்சேவைப் பேச அனுமதிப்பது தொடர்பாக அமெரிக்கா, யப்பான், ஐரோப்

(7-ம் பக்கம் பார்க்க)

---

வளைகுடா யுத்தத்தினைத் தொடர்ந்து

# அமெரிக்க, ஐரோப்பிய, யப்பான் மோதுதல்கள் உக்கிரம் கண்டுள்ளன

ஈராக்குக்கு எதிரான ஆக்கிரமிப்பு யுத்தத்தின் போது ஏகாதிபத்தியச் சக்திகள் தம்மிடையே ஏதோ ஐக்கியம் நிலவுவதாகக் காட்டும் பம்மாத்தில் ஈடுபட்டிருந்த போதிலும் அமெரிக்கா, ஐரோப்பா, யப்பான் இடையேயான ஆழமான மோதுதல்கள் நாளாந்தம் அதிகரிக்கும் அடையாளங்கள் வெளிப்பட்டுள்ளன.

பாரசீக வளைகுடா யுத்தத்தினைத் தொடர்ந்து அமெரிக்கா, ஐரோப்பிய இராணுவ விவகாரங்கள் தொடர்பாக 'கர்வத்துடன்' நடந்து கொள்வதாக பிரான்சிய அதிகாரி வெளியிட்ட கண்டன அறிக்கையொன்றை 'வாஷிங்டன் போஸ்ட்' பத்திரிகை வெளியிட்டிருந்தது. அமெரிக்கா தனது இராணுவப் பிடியினை ஐரோப்பிய பிராந்தியத்திலும் இறுக்கமாக்கும் பொருட்டு ஐரோப்பிய சுதந்திர பாதுகாப்பு அமைப்புக்களிலும் தலையிட்டுள்ளது. 'வாஷிங்டனின் எதிர்கால ஆளுமையைப் புதுப்பித்துக் கொள்ளும் பொருட்டு வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பினைப் (நேட்டோ) புதுக்கி அமைக்கவும் அமெரிக்கா திடசங்கற்பம் பூண்டுள்ளமை பிரான்சுக்குப் பெரும் பிரச்சினையாகியுள்ளது' என 'வாஷிங்டன் போஸ்ட்' மேலும் குறிப்பிட்டுள்ளது. கடந்த பெப்ரவரியில் பிரான்சிய, ஜேர்மன் அதிகாரிகள் ஒரு புதிய சுதந்திர இராணுவக் கொள்கைக்கான அடித்தளமாக ஐரோப்பியச் சமூகம் விளங்க வேண்டும் எனப் பிரேரித்திருந்தனர். இந்த [illegible] டம் வெளிப்பட்ட [illegible] தாமதம் அமெரிக்க ஜனாதிபதி புஷ், மிட்ரண்ட் அரசாங்கத்தினை மிரட்டும் பாணியில் ஒரு கடிதத்தினை அனுப்பிவைத்தார். இதனை பிரான்



ஜோர்ஜ் புஷ்

சிய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளவும் மறுத்துவிட்டது.

இந்த [illegible] முற்பகுதியில் மேலும் மோசமடைந்துள்ளன. 'நேட்டோ' இராணுவ நடவடிக்கைகளில் முழு அளவிலான மாற்றம் செய்யும் திட்டங்களை அங்கீகரித்தமையும், ஐரோப்பாவில் அமெரிக்கப் படைக் குறைப்பும், பிரித்தானிய ஜேர்மன் படைகளைப் பெருமளவில் கொண்ட ஒரு அதிரடிப் படையை உருவாக்கவும் எடுத்த முடிவு இந்த ஏகாதிபத்திய முரண்பாடுகளையும், மோதுதல்களையும் மேலும் உக்கிரமாக்கி உள்ளன. இராணுவ அமைப்புக்களை 'மறுசீரமைக்கும்' அமெரிக்கத் திட்டம் ஐரோப்பாவின் கழுத்தினை நெரிக்கும் திட்டமென பிரான்சிய வெளிநாட்டு அமைச்சர் நோலன்ட் டுமாஸ் 'வெஸ்டேர்ண் ஈரோப்பியன் யூனியனில்' பேசுகையில் குறிப்பிட்டுள்ளார். யுத்தத் தயாரிப்புக்கள் சம்பந்தமாக 'ஐரோப்பியர்கள் என்ன செய்ய வேண்டும் என அமெரிக்கா கட்டளையிடக் கூடாது' எனவும் டுமாஸ் குறிப்பிட்டார்,

## சீ.ஐ.ஏ. அறிக்கை

இதே விதத்திலேயே அமெரிக்க, யப்பான் உறவுகளும் பதட்டம் நிறைந்து காணப்பட்டன. அமெரிக்க சீ.ஐ.ஏ.ல் தயார் செய்யப்பட்டு, பத்திரிகைகளுக்கு வெளியிடப்பட்ட ஒரு இரகசிய அறிக்கை யப்பானில் பெரும்பிரச்சினைகளைத் தூண்டிவிட்டுள்ளது. 'யப்பான் 2000' என்ற தலைப்பிலான இந்த சீ.ஐ.ஏ. அறிக்கை 'யப்பானின் சவாலுக்கு' முகம் கொடுக்க அமெரிக்க வெளிநாட்டுக் கொள்கையில் செய்ய வேண்டிய பெரும் மாற்றங்கள் பற்றிக் குறிப்பிட்டது. யப்பான் 'உலகத் தலைமைக்கும் உலக சேம நலனுக்குமான' பொறுப்பை ஏற்க முயல்வதாக இந்த அறிக்கை வருணித்ததோடு உலகப் பொருளாதாரத்தினை தனது ஆளுமைக்குள் கொணர முயல்வதாகவும் குறிப்பிட்டிருந்தது. உலகப்

(7-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய முதலாளித்துவம் நெருக்கடிக்குள்

இந்தியப் பொதுத் தேர்தலின் பின்னர் காங்கிரஸ் கட்சியின் புதிய தலைவரான, நரசிம்மராவ் பிரதம மந்திரியாக நியமனம் பெற்றுள்ளார். காங்கிரஸ் கட்சியினுள் பிரதமர் பதவிக்காகப் போட்டியிட்ட மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் ஷராத் பவார் இறுதி நேரத்தில் போட்டியில் இருந்து விலகிக் கொண்டதையடுத்து நரசிம்மராவ் 'போட்டியின்றி' தெரிவு செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது,

நடந்து முடிந்த பொதுத் தேர்தல் முடிவுகளின்படி காங்கிரஸ் கட்சி, லோக் சபாவில் 236 ஆசனங்களைக் கைப்பற்றியபோதிலும்அறுதிப் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதனால் நரசிம்மராவினால் அமைக்கப்பட்டுள்ள காங்கிரஸ் அரசாங்கம் மிகவும் ஈடாட்டம் கண்ட அரசாங்கமாக ஆரம்பம் முதலே காட்டிக் கொண்டுள்ளது. 'கபினட்' அமைச்சர் பதவிப் பங்கீட்டிலும், அமைச்சர் அவை ஒதுக்கீடுகளிலும் நடைபெற்ற இழுபறிகளால், பிரதமரே பாதுகாப்பு அமைச்சர் பதவியையும் ஏற்றுக்கொள்ள வேண்டி நேரிட்டது. ஷராத் பவார் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பதவிக்கு நடாத்திய போட்டியிலும் தோல்வி கண்டதோடு, மாநில முதலமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வதைத் தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சர் பதவி அவரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மாஜி 'றிசேர்வ் வங்கி' அதிபரான மன்மோகன் சிங் நிதி அமைச்சராக நியமனம் பெற்றுள்ளார். வெளிநாட்டு முதலீடுகளின் தடையற்ற பாய்ச்சலுக்கான முக்கிய பேச்சாளராக இவர் விளங்கி வந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

காங்கிரஸ் கட்சி முதலாளிகளிலிருந்து வேறுபட்ட வேலைத்திட்டங்கள் தம்மிடம் இருப்பதாக வாயடித்து வந்த வீ. பி. சிங்கின் 'ஜனதா தளம்' கட்சி, காங்கிரஸ் கட்சிக்கு முண்டுகொடுக்க முன் வந்துள்ளது, காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதா கட்சியும் நாட்டின் எதிரிகள் எனக் கதையளந்து வந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி (சிபிஐ) களின் ஸ்டாலினிசத் தலைவர்கள் ஒரு 'உறுதியான அரசாங்கம்' அவசியமாக வுள்ளதால் காங்கிரஸ் கட்சி அரசாங்கத்துக்கு ஆதரவு தர முன்வந்துள்ளனர்.

உலகச் சந்தையுடனும் உலகப் பொருளாதாரத்துடனும் உறவுகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தினை இந்தியாவுக்குள் தருவிப்பதன் மூலம் இந்தியாவை கைத்தொழில்மயமாக்கி, பலம் வாய்ந்த நாடாக்கப் போவதாக நரசிம்மராவ் அறிவித்துள்ளார். உலக வங்கி, சர்வதேச நாணய நிதிய கட்டளைகளை முழுமனே இந்தியாவுள் அமுல் செய்வதன் மூலம் இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக காங்கிரஸ் அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் தாக்குதல்களுக்கான பொருளாதார, அரசியல் நெருக்கடியின் பின்னணியை இக்கட்டுரை விளக்குகின்றது, தேர்தலுக்கு முன்னதாக ஆர். நேசனால் எழுதப்பட்ட இக்கட்டுரை இந்திய தேசிய முதலாளி வர்க்கத்தின் 'சுதந்திரம்' 'கூ'ட்டுச் சேராமை', 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' பம்மாத்துக்களின் சுயகோலத்தை உரிந்து காட்டுகின்றது,



சென்னைத் தொழிலாளரின் வாழ்க்கை நிலைமை

சந்திரசேகர் 'சுதந்திர' இந்தியாலின் எட்டாவது பிரதமராக அமர்த்தப்பட்டதுதான் தாமதம் முதலாளித்துவவெகுஜன தொடர்புச் சாதனங்கள் அவரை 'சோசலிஸ்ட் சந்திரசேகராக' அறிமுகம் செய்து, அவரின்ஏகாதிபத்தியவிரோத கொள்கைகள் பற்றி நீட்டி, நிறைய எழுதின. முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களின் இந்த விஷமத்தனமான பிரச்சாரத்தின் இலக்கு, இந்திய முதலாளி வர்க்கத்தின் நிஜ எதிர்பார்ப்புக்களை எல்லாம் பூசி மெழுகுவதே.

சந்திரசேகர் 'ஜனதா தளம்'' என்ற குட்டி குழுவின் தலைவர். இது இந்தியப் பாராளுமன்றமொத்தஆசனங்களான 513ல் 54ஐ கொண்டுள்ளது. இருப்பினும் அவர் ஒரு அரசாங்கத்தினை அமைக்கும்படி ஜனாதிபதி வெங்கட்ராமனால் அழைக்கப்பட்டார். இந்த ஏமாற்றுவித்தை ஆரம்பம் முதலே இந்திய முதலாளி வர்க்கம் பாராளுமன்ற ஜனநாயகத்தில் இருந்து தடம் புரண்டு போனதையும், ஒரு சர்வாதிகார திசையில் காலடி வைத்துள்ளதையும் தெளிவாகக் காட்டியது.

அவர் ஆட்சியில் இருந்த சொற்ப காலத்துள் உலக ஏகாதிபத்தியத்தினதும் இந்திய முதலாளி வர்க்கத்தினதும் நலன்களுக்கு செய்யக்கூடிய சேவையை ஆற்றினார். சந்திரசேகரின் அரசாங்கம் உலக ஏகாதிபத்தியத்துடனானஉறவுகளைப் பலப்படுத்தல், தமிழ் தேசியப் போராட்டத்தினை நசுக்குதல், காஷ்மீர், பஞ்சாப், அசாம் எழுச்சிகளை ஒடுக்குதல் போன்றவற்றில் உக்கிரமாக ஈடுபட்டிருந்தது.

வளைகுடா யுத்தத்தின் போது சந்திரசேகர் அரசாங்கம் காட்டுமிராண்டி ஏகாதிபத்திய யுத்தத்துக்கு ஆதரவளித்தது, ஈராக்குக்கு எதிரான குண்டுவீச்சில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானப் படை விமானங்கள் இந்தியாவில் தரையிறங்கவும எண்ணெய் நிரப்பவும் அனுமதி வழங்கியது. ஏகாதிபத்திய யுத்த விமானங்கள் இந்திய விமானத் தளமொன்றில் தரையிறங்க அனுமதிக்கப்பட்டது இதுவே முதல் தடவையாகும். கடந்த 10 ஆண்டுகளாக இந்திய முதலாளி வர்க்கம் தவிர்த்து வந்த நிபந்தனைகளின் கீழ் சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து கடன் பெற, இணங்கினர். யன்னாட்டு ஏகபோகங்களின் மூதலீடுகளை விரைவு படுத்தும் பொருட்டு அவர் இந்திய வெளிநாட்டு முதலீட்டுக் கொள்கைகளில் பல மாற்றங்களைச் செய்தார்.

இந்திய முதலாளி வர்க்கத்திற்கு பேரதிர்ச்சியை உண்டு பண்ணி வந்த தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினை நசுக்கும்பொருட்டுதனது முன்னோடிகளைக் காட்டிலும் படு ஈவிரக்கமற்ற முறையில் சந்திரசேகர் நடந்து கொண்டார். தமிழ் நாட்டிலும் இந்திய தென் மாநிலங்களில் தமிழ் விடுதலைப் போராளிகளின் நடவடிக்கைகளை நசுக்கித் தள்ளும் பொருட்டு இந்தியப் பொலிசாருக்கும் இராணுவத்துக்கும் விசேட அதிகாரங்களை வழங்கினார். விடுதலைப் போராளிகளின் சகல முகாம்களையும் அடித்து மூடச் செய்ததோடு விடுதலைப் போராளிகளில் பெருவாரியானோர் கைது செய்யப்பட்டனர். அவர்களின் தொடர்புச் சாதனங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. இதனால் இலங்கையின் வட—கீழ் மாகாணங்களுடனான அவர்களின் தொடர்புகள் துண்டிக்கப்பட்டன. பாக்குத் தொடுவாயில் விடுதலைப் போராளிகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் இந்திய கடற்படைக் கண்காணிப்புப் படகுகள் ஈடுபடுத்தப்பட்டன. இதன் மூலம் வட—கீழ் மாகாணங்களுடனான அவர்களின் விநியோக மார்க்கங்கள் வெட்டப்பட்டன. இந் நடவடிக்கைகளின் உச்சக் கட்டமாக தமிழ்நாடு மாநில அரசாங்கம் கலைக்கப்பட்டதோடு மாநிலம் நேரடி ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொணரப்பட்டது.

தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு ஆதரவாக தமிழ் நாட்டு தொழிலாளர் ஏழை விவசாயிகளின் ஆதரவு திரட்டப்படுமோ என்ற அச்சமே இந்நடவடிக்கைகளை எடுக்கச் செய்தது. ஆனால் தமிழ் நாடு முதலமைச்சர் கருணாநிதி, முக்கிய தமிழ் விடுதலை இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவளிப்பதாலேயே அது கலைக்கப்பட்டது என்ற பம்மாத்து பிரச்சாரங்களில் சந்திரசேகர் அரசாங்கம் ஈடுபட்டது. உண்மையில் கருணாநிதி அரசாங்கமோ தென்இந்திய ஒடுக்கப்படும் தமிழ் மக்களின் உணர்வுகளையும் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்தினையும் தனது சொந்த முதலாளித்துவ அரசாங்கத்தினைக் காக்கப் பயன்படுத்தி வந்தது. சந்திரசேகர் ஆட்சியில் காஷ்மீர், பஞ்சாப், அசாமில் இராணுவ, பொலீஸ் காட்டுமிராண்டித்தனம் உச்சக் கட்டத்தை அடைந்தது. அசாமிலும், அத்தோடு தமிழ் நாட்டிலும் மாநில அரசாங்கங்கள் கலைக்கப்பட்டு, மத்திய அரசாங்கத்தின் நேரடி ஆட்சி திணிக்கப்பட்டது. ஒரு குட்டி முதலாளித்துவ தேசிய இயக்கமான அசாம் ஐக்கிய விடுதலை முன்னணி (ULFA) தடை செய்யப்பட்டு அதன் தலைவர்கள் கைது செய்யப்பட்டனர். 'பரா' இராணுவப் படைப் பிரிவுகளுக்கு U.L FA அங்கத்தவர்களையும் ஆதரவாளர்களையும் 'தேடி அழிக்கும்' நடவடிக்கைகளில் ஈடுபடும் சிறப்பு அதிகாரங்கள் வழங்கப்பட்டது.

## ஸ்டாலினிஸ்டுகள் பாத்திரம்

சீ. பி. ஐ, சீ. பி. எம். ஸ்டாலினிசக் கட்சித் தலைவர்கள். தமது நடுநிலைமைகொள்கை மூலம் சந்திரசேகர் ஆட்சிக்கு பூரண ஆதரவு வழங்கினர். இவர்கள் தம்மை வீ. பி. சிங்கின் இந்திய முதலாளி வர்க்கத்தின் 'முற்போக்கு' கன்னையுடன் பிணைத்துக் கொண்டு, தொழிலாள வர்க்கத்துக்கு எதிரான தாக்குதல்களில் தொடர்ந்து ஈடுபட்டு வந்தனர். ஸ்டாலினிச தொழிற்சங்க அதிகாரத்துவம், முதலாளி வர்க்கத்தின் பிரதம ஏஜன்டாக தொழிலாள வர்க்கத்தினுள் தொழிற்பட்டு வந்தது. வேலைநிறுத்த முறியடிப்புக்களில் ஈடுபட்டுவந்த இவர்கள், தொழிலாள வர்க்கத்தினை மத, பிராந்திய ரீதியில் பிளவுபடுத்தி வந்தனர். 1990 நவம்பர் இறுதியில் இந்தத் துரோகிகள் 450,000 தொலைத் தொடர்பு தொழிலாளர்களின் டெல்ஹி, பம்பாய் உள்ளமர்வு வேலைத் நிறுத்தத்தினை விலைகூறி, விற்றனர் 100 ரூபாய்களை இடைக்கால அலவன்சாக ஏற்றுக் கொண்டு இந்த கருங்காலி வேலையில் ஈடுபட்டனர். ஹிந்து, முஸ்லீம் மற்றும் மதக் குழுக்களைச் சேர்ந்த இந்திய தொழிலாளர்களின் இந்த இருமாத கால உள்ளமர்வு வேலைநிறுத்தம் தொழிலாள வர்க்கத்தின் பலத்தினை எடுத்துக்காட்டியதோடு சோசலிச பாரதீய ஜனதா கட்சிக்கு ஒரு சவாலாகவும் விளங்கியது. அச்சமயத்தில் இக்கட்சி அயோத்திக்கான ஹிந்துக்களின் யாத்திரையில் ஈடுபட்டிருந்தது.

சந்திரசேகரின் பாராளுமன்ற ஆட்சிக் காலம் எதிர்பார்க்கப்பட்டது போல் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு வாபஸ் பெறப்பட்டதும் ஒரு முடிவுக்கு வந்தது. பொதுத் தேர்தல்வரை சந்திரசேகர் காபந்து பிரதமராக இருந்து வந்தார். இந்த நெருக்கடிகளுக்குமத்தியில் சந்திரசேகா இரண்டு பொலிசாரை உளவு பார்க்க ராஜீவ் காந்தியின் இல்லத்துக்கு அனுப்பினார். காந்தியின் காங்கிரஸ் கட்சியில் இருந்து விலகக் கூடியவர்களைப் பற்றித் தகவல் சேகரிக்கவே இந்த உளவு நடவடிக்கை இடம்பெற்றது. இத்தகைய உளவுகளும், சூழ்ச்சிகளும், துரோகங்களும் இந்திய முதலாளித்துவ பாராளுமன்ற அரசியலின் இணைந்த பாகமாகும். உண்மையில் சந்திரசேகர் ஆட்சியின் நெருக்கடிக்கான நிச காரணியாக உலக நெருக்கடி விளங்கியது. இது வளைகுடா யுத்தத்தின் மூலம் உக்கிரம் கண்டது. அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமையிலான காட்டுமிராண்டி யுத்தத்தினைத் தொடர்ந்து, இந்தியாவுக்குக் கிடைத்து வந்த பெருவாரியான வெளிநாட்டுச் செலாவணி வருமானம் (குவைத், ஈராக்) நின்று போனதோடு, எண்ணெய் இறக்குமதிகளின் பேரில் இந்தியா பெருவாரி பணத்தினைச் செலவிடும்படி தள்ளப்பட்டது. இதனால் இந்திய 'ரிசேர்வ் பாங்' கையிருப்புக்கள் காய்ந்து போயின. ''வளைகுடா நெருக்கடி தீர்க்கப்பட்டாலும் எண்ணெய் விலைகள் முன்னைய ஆண்டுகளின் குறைந்த மட்ட

இறங்காது’’
உலக வர்த்தக
லும் சாதகமாக
னவும் ரிசேர்வ்
91 மார்ச் அறிக்
டிருந்தது.

தின் பின்னர் ஒரு
பொருளாதாரத்
எழுப்பும் இந்
ளி வர்க்கத்தின்
சிகளும் தோல்வி
பாதுகாப்புவாத
கொள்கைகளி
திபத்தியத்திடம்
அவுன்சு சுதந்தி
தன்னும் வெற்றி
டியவில்லை. உலக
உக்கிரம் அடைய
ாதிபத்திய ஆளு
ட உலகச் சந்தை
ங்கி இணைந்து
1984 - 1989
தி ஆட்சிக் காலத்
நாட்டு வர்த்தகத்
கொள்கை மாற்
பட்டன. ஏகாதி
ீட்டாளர்களுக்கு
த தடைகள் அகற்
ாடு பல நூற்றுக்
சிறிய, நடுத்தரக்
ல்கள் இழுத்து
ன. இதன் தாக்கம்
வேலையில்லாத்
ம் மேலும் உக்
து.

ரின் ஆட்சிக்
வெளிநாட்டுச்
கையிருப்புக்கள்
ானதோடு, அர
து வங்குரோத்
கடனம் செய்து
இந்தியாவின்
தகுதியை உத்
சய்யும் விதத்தில்
நாணய நிதியம்
ன் டாலர்களை
டனாக வழங்கி
டா யுத்தத்தால்
ஷ்டத்தினை ஈடு
யா, ச. நா. நிதி
து ‘அதிகம் நிபந்
றி’ 4 பில்லியன்
கோரியது. எஞ்
ல்லியன் டாலர்
இந்தியப் பொரு
கொள்கைகளில்
றங்களை ச. நா.
ண்டி நிற்கிறது.
ாழிலாளர, ஒடுக்
களிடமிருந்து ஏற்
காதிப்பு பற்றிய
ல் சிக்கன நட
ள ஒரேயடியாக
ர்ள இந்திய
கத்தினர் தயங்கி
. இந்தியாவின்
க் கொள்கை
லத்திலும் முற்றி
க்க ஏகாதிபத்தி
சார்ந்திராததால்
யம் கடன்களை
தயக்கம் காட்டி
னால் இன்றோ
வழங்குவதற்கு
வரவுசெலவுத்
றாக்குறைகளை
நாட்டு உற்பத்தி
தள் கட்டுப்படுத்
வேண்டும் எனக்
து. வரவு செல
மானியங்கள் நீக்
வேண்டும் என்
க்குறை வெட்டு
ளில் ஒன்றாகும்.
இன்டர்நஷனல்’
இதழ் (பெப்ரவரி
உணவு, பசளை
ள வெட்டவும்
இயங்கும் சில அர
றைகளுக்கு வரவு
உதவியைக்
இணக்கம்காணப்

பட்டதாக’’ குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இந்த வெட்டுக்கள் பற்றிய விபரங்களை சமர்ப்பிக்க முன்னரே சந்திரசேகர் அரசாங்கம், மார்ச் 5ல் இராஜினாமாச் செய்ய தள்ளப்பட்டது. இடைக்கால வரவு செலவுத்திட்டத்தினைசந்திரசேகர் அரசாங்கம் சமர்ப்பித்த போதிலும் அதன் மீதான விவாதங்களை பொதுத் தேர்தலின் பின்னரே நடாத்துவதென சீ. பீ, ஐ., சீ. பி. எம். உட்பட சகல கட்சிகளும் ஏற்றுக் கொண்டது. இது இந்திய முதலாளித்துவ நெருக்கடியின் ஆழத்தைக் காட்டுகின்றது.

வளைகுடா யுத்தம், இந்தியாவை எந்தவொரு கணத்திலும்காலனியாக்கும்அமெரிக்க ஜேர்மன், பிரித்தானிய ஏகாதிபத்தியங்கள் எடுக்கும் முயற்சிகளை பிரத்தியட்சமாக்கி உள்ளது, இத்தயாரிப்பு யுத்தத்தின் போதும், யுத்தத்தின் பின்னரும் இடம் பெற்றுள்ளது. இந்தத் தயாரிப்புக்களுடன்கைகோர்த்துக் கொள்ளும் தமது உஜார் நிலையையும் இந்திய முதலாளி வர்க்கம் சமகாலச் சம்பவங்கள் மூலம் காட்டிக் கொண்டுள்ளது. குளிர் யுத்தமும், கிரேம்ளின் ஸ்டாலினிச அதிகாரத்துவத்தின ஆதரவும ஏகாதிபத்திய எதிர்ப்பு, கூட்டுச் சேராமை, சுதந்திரம், அஹிம்சை சுலோகங்களின் கீழ் கோடானுகோடி இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைச் சுரண்டுவதற்கான, வாய்ப்பினை இந்திய முதலாளி வர்க்கத்துக்கு வழங்கியது. இன்றைய கொர்பச்சேவ் கொள்கைகள் இந்த ஏகாதிபத்திய எதிர்ப்பு’ அரசியல் காலப்பகுதிக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளது, கொர்பச்சேவ் அதிகாரத்துவம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு முற்றிலும் அடிபணிந்தமையானது தேசிய முதலாளி வர்க்கங்களுக்கு எதையும் விட்டு வைக்கவில்லை. உலக ஏகாதிபத்தியத்திடம் நிபந்தனையின்றி சரண் அடைவதே அவர்களுக்கு இன்று எஞ்சியுள்ளது. இந்திய முதலாளி வர்க்கம் நீண்ட காலமாகக் கோஷித்து வந்த ‘இந்து சமுத்திர சமாதான பிராந்தியம்’, ‘டியாகோகாசியாவில் அமெரிக்க கடற்படை, விமானத் தளங்களைமூடுதல்’ போன்றசுலோகங்களை மெதுவாகக் கை நழுவ விட்டுள்ளது.

இந்திய — இலங்கை உடன்படிக்கை (1987) ஏகாதிபத்தியம், இந்தியா தொடர்பாகக் கடைப்பிடித்து வந்த கொள்கைகளில் ஒரு தெளிவான பெயர்ச்சியின் ஆரம்பத்தைக் காட்டியது. ஆப்கானிஸ்தானில்இருந்து சோவியத்துருப்புகள் வாபஸ்பெறப்பட்டமையும் பிராந்தியத்தில் ‘கம்யூனிச ஆபத்து’ இல்லாமல் போனமையும் துணைக்கண்டத்தில் பாகிஸ்தானை ஒரு ஏகாதிபத்திய இராணுவத் தளமாக பராமரிக்க வேண்டிய அவசியம் இல்லாதுபோய் விட்டது. இலங்கையில் உருவானது போன்ற சமூக நெருக்கடிகளை கட்டுப்படுத்த தமது பூரண ஆதரவினை இந்திய ஆளும் வர்க்கம் காட்டிக் கொண்டது.

8-ம் பக்கம் பார்க்க)

# இந்திய ஸ்ரொட்ஸ்கிஸ்டுகளுக்கு எதிரான பொலிஸ் வேட்டையை கண்டனம் செய்!

அனைத்துத் தொழிலாளர் இயக்கம் உடனடியாக இந்திய ட்ரொட்ஸ்கிச இயக்கமான சோசலிசதொழிலாளர் கழகத்துக்கெதிரானபொலிஸ் தாக்குதல் பிரசாரத்தை கண்டிக்க வேண்டும், நான்காம் அகிலத்தின்அனைத்துலக குழுவுடன் அரசியல் ஐக்கியம் பூண்டுவுள்ள சோசலிச தொழிலாளர் கழகமானது இந்தியாவில் அரசியல் குழப்ப நிலையின் மத்தியில், அரச படைகளின் இலக்கிற்கு ஆளாகியுள்ளது.

சமூக கலவரங்கள் மோசமடைகையில் சோ. தொ. கழகத்தின் அங்கத்தவரை வாய்மூடிகளாக செய்யும் நோக்குடன்பொலிஸார்அவர்களை கோபமூட்ட பல முயற்சிகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டனர். இம்முயற்சிகள் முற்றாக தோல்வியடைந்தன, 800 மில்லியனுக்கு மேற்பட்டசனத்தொகைகொண்ட இந்நாட்டில் கவனிக்கப் பெறாது அபிவிருத்தி கண்டுள்ள பாரிய சமூக நெருக்கடியை தீர்க்க இலாயக்கற்ற தமது சுய இயலாமையை மறைக்கும் பொருட்டு எந்நாளும் இனவாத, வகுப்புவாதத்தைதூண்டிக்கொண்டிருக்கின்றார்கள்’ இந்தியாவின் முதலாளித்துவ அரசியலாளர்கள். அவ்வேளையும் சோ. தொ. கழகமானது சிறிலங்கா. தமிழீழ பாட்டாளி மக்களுடன் இணைந்து, இந்திய தொழிலாள வர்க்கத்தையும் ஐக்கியபடுத்த போராடிக் கொண்டிருக்கிறது. அத்துடன் அதுதான் தொழிலாள இயக்கத்தில் எடுக்கவேண்டிய ஒரே ஒரு போக்காகவும் காணப்படுகின்றது. ‘சோசலிச தொழிலாளர் கழகமான இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் மீது பொலிஸார் கவனம் எடுப்பதும் கண்காணிப்பும் அண்மையில் தேர்தல் பிரசாரத்தில் மட்டும், 200 பேர் அநியாயமாக மாண்டுபோன கொடூரமான நிலைமைகளின் போதே ஆரம்பித்துள்ளது.

உத்தரபிரதேச வடகிழக்கு பிராந்தியத்தில் 1000 சீமேந்து தொழிலாளர் மீது பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தினால் கடந்த வாரம் 12 தொழிலாளர் இறந்தும் 60 பேர் காயமுற்றும் உள்ளனர். அரச உடமையான டால்லா சீமேந்து தொழிற்சாலையை டால்மியாகைத்தொழில்பேட்டைக்கு கையளிப்பதை தடுக்குமுகமாக தொழிலாளர் வாயிலில் தடை செய்ய நின்றனர். புது டெல்லிக்கு 310 மைல் கிழக்கேயுள்ள புனித இந்து நகரான வார்ணாசிக்கண்மையில், சுனிபட்ரி நகரிலுள்ள இத்தொழிற்சாலை உத்திர பிரதேச சீமேந்து கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானது இது ஓர் ஞாயிற்று[illegible] கம் புதியதனிப்பட்ட சொந்த காரரது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முயல்கையில் நிகழ்ந்துள்ளது. சுமார் 7000 தொழிலாளர் கொண்ட ஒப்ரா தேமல்பவர் பிளான்டை சேர்ந்த சகல தொழிலாளரும் பொலிஸ் நடவடிக்கைக்கெதிரான தமது எதிர்ப்பை தெரிவிக்க வேலைநிறுத்தம் செய்தனர், இதனால் அப்பகுதியில் பலத்த மின்சார தட்டுப்பாடும் ஏற்பட்டது.

தொழிற்சாலையை தனியார் வர்த்தகதுறைக்குமாற்றுவதான தீர்மானம் தேசிய, பிராந்திய அரசாங்கங்களின் தனியார் திட்டத்தின் ஓர் அம்சமாகும். தனியார்மயமாக்கலின்போது தொழில் பாதுகாப்பு அழித்தொழிக்கப்படுவதுடன் தொழில் நிலைமைகளும் பாரியளவுக்கு வீழ்ச்சியுறும். இத் திட்டம் தொழிலாள வர்க்கத்தின் பலத்த எதிர்ப்புக் காட்டபட்ட ஒன்றாகும். டல்லா தொழிற்சாலையை பொறுத்தமட்டில் அக்கம்பெனியை தனியாருக்கு ஒப்படைப்பதினை நியாயப்படுத்தமுயலும் அரசாங்கமானது வேலைநிறுத்தம் குறையுற்பத்தி என்பன குறைந்த இலாபத்தை தருவதாக கூறுகின்றது: சுதந்திர பத்திரிகையாளர் பிரசுரங்கள் சீமேந்து தொழிற்சாலை ஊழியர்கள் மாதம் ஒன்றுககு 75 ஸ்டேலிங்பவுனிலிருந்து 100 ஸ்டேலியின்பவுன் வரை பெறுவதாக கூறுகின்றன.

சோ. தொ. கழகம் 2 அங்கத்தவரை அண்மைய தேர்தலில் நிறுத்தியது. தென் மாநில தமிழ் நாட்டில் சென்னையிலுள்ள பக்கிங்காம் கர்னாட்டிக்நெசவு ஆலை தொழிலாளியான தோழர் பீ. மோசஸ் வடசென்னை தேசிய லோகசபை ஆசனத்திற்கு போட்டியிட்டார். ஸ்டான்டட் மோட்டார் தொழிலாளர் தொழிற் சங்கத்தின் முன்னைநாள் நிர்வாக குழு உறுப்பினரான தோழர் எம். கைலாசம் தமிழ்நாடு மாநிலத்தின் வில்லிவாக்கம் தேர்தல் தொகுதியின் வேட்பாளராக போட்டியிட்டார்.

மே 21ம் தேதி ராஜிவ் காந்தி கொலை செய்யபடுவதற்கு முன்பிருந்தே இந்திய ட்ரொட்ஸ்கிஸ்டுகள் அரசாங்கத்தின் வேட்டைக்கு ஆளாகியுள்ளனர். ஏப்ரல் 23ம் திகதி சோ. தொ. கழக பத்திரிகையான ‘‘தொழிலாளர் பாதை’’யின் ஆசிரியரான தோழர் எஸ். ராம் தமிழ்நாடு தலைநகரான சென்னையில் ‘‘கிராமப்புற கொலைகளும், சிறிலங்காவின் இனவாத யுத்தமும்-பின்னணியும் தீர்வும்’’—என்ற தலைப்பில் பொதுக்கூட்ட மொன்றில் பேசினார், இருதினங்களுள்பொலிஸார்பிடியாணையின்றி விசாரணை, ஆய்வு [illegible] ஏப்ரல் 25ம் திகதிபகல் 4மணிக்குபொலிஸ்



சோ. தொ. க. கூட்டத்தில் தோழர் கைலாசம் பேசுகிறார்,

காரியாலயத்தை சேர்ந்த இன்ஸ்பெக்டர் குருசாமி என்று தன்னை கூறிக் கொண்ட பொலிஸ் உத்தியோகஸ்தர் சோ. தொ. கழக தலைமை காரியாலயத்தில் ராமை சந்திக்க வேண்டுமென உத்தரவு விடுத்த படி பிரசன்னமாயிருந்தான், தொடர்ந்து வந்த நாட்களில் அதே பொலிஸ் உத்தியோகஸ்தர் தோழர் மோசசின் உறவினர் வீடுகளுக்கு சென்று அவர்களிடம் அவரின் கடந்த கால, தனிப்பட்ட வாழ்க்கை, குடும்பம், அவரது அரசியல் வேலைபற்றி விசாரித்துள்ளான்.

பின்னர் மே 12ம் திகதி மாலை5மணியளவில் மோசஸ்சின் வீட்டிற்கும் குருசாமி வந்தான். அன்று பீஅன்ட் சி தொழிலாளரது பேரம்பூர் பரஸ்றோட் காரியாலயத்தின் வாயிலில் மோசசை சந்தித்த குருசாமி, சோ. தொ. கழகத்தின் ஏனைய அங்கத்தவர்களைப்பற்றி விசாரித்ததுடன் பஸ் தொழிலாளர் வேலை நிறுத்தத்தில் கட்சி தலையிடுகிறதா என்றும் விசாரித்தான்.

பின்னர் 21ம் திகதி அண்ணா நகர் விசேட பொலிஸ்துறையை சார்ந்த கான்ஸ்டபிள் சிவலிங்கம் (பீ, சி. 2179) தோழர் கைலாசத்தின் வீட்டிற்கு காலை சென்றுள்ளான். வீட்டில் அவர் காணப்படாமையால் அன்று மாலை அங்கு சென்று, தன்னை திருமங்கலம் பொலிஸ் ஸ்டேஷனில் வந்து சந்திக்குமாறு கூறிச் சென்றுள்ளான்.

மே 21ம் திகதி சோ. தொ. கழகம் இப் பொலிஸ் வேட்டையை நிறுத்துமாறு கோரியது. சென்னை பொலிஸ் கமிசனருக்கு எழுதிய கடிதத்தில் மோசஸ் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

‘‘மேற்குறிப்பிட்ட முயற்சிகள், சட்டரீதியில் பதிவுசெய்யப்பட்ட அரசியல் கட்சியான எமது நிறுவனத்தின் அங்கத்தவர்களின் சிவில், அரசியல் உரிமைகளை பாதிக்கும், மீறும்படியான விசாரணைகளாக நியாயமற்றவையாக, எம்மால் கருதப்படுகின்றது, இச்செயல்கள் சோ. தொ, கழகத்தின் கொள்கைகள் வேலை திட்டங்களை பிரசாரம் செய்தலானஉரிமைகளில் தலையிடும் ஒன்றாகும். அத்துடன் வடசென்னை, வில்லிவாக்கம் தொகுதிகளில் தனது வேட்பாளரின் தேர்தல் பிரசாரத்தினை நடத்தும் உரிமையிலும் தலையிடும் செயலாகும்.’’

தொழிலாள இயக்கத்தின் புரட்சிகர குரலை அடக்க பொலிஸார், சென்னைதொழிற்சங்க ஸ்டாலினிச தொழிற்சங்க அதிகாரத்துடன்வெளிப்படையாக செயற்படுகிறது. கடந்த டிசம்பர் மாதம் 13ம் திகதி தோழர் ராம் பீஅன்ட் சீ மில் தொழிலாளரிடையே மற்றாஸ் லேபர் யூனியன் கூட்டிய கூட்டத்தில் பேசிய போது 30குண்டர்களால் தாக்கப்பட்டார். இக்குண்டர்குழுவானது 1989ல் தோழர் ராம் தலைவர் பதவிக்கு போட்டியிடும்போது போட்டியிட்ட அப்போதைய தலைவர்பதவியிலிருந்த மற்றாஸ் தொழிற்சங்க தலைவரும் இந்திய ஸ்டாலினிசகம்யூனிஸ்ட் கட்சி (மார்ஸிய) உறுப்பினருமான டப்ளியூ. ஆர். வரதராஜனினால் ஒழுங்கு செய்யப்பட்டது. ராமை தாக்கியவர்கள் இ. க. கட்சி (மார்க்ஸிச) யை சார்ந்த மற்றாஸ் லேபர் யூனியன் நிர்வாக குழு உறுப்பினருமான குமரேசன் என்பவரால் தலைமை வகிக்க பட்டனர். தாக்குதல் ஒயும்வரை அண்மையிலிருந்த புளியந்தோப்பு பொலிஸ் நிலைய பொலிஸார் பக்கத்திலிருந்து தலையிடாது பார்த்துகொண்டிருந்தனர். அவர்கள் பின்னர் ராமை கைது செய்ததுடன் வழக்கும் தொடுத்துள்ளனர்.

சோ. தொ. கழகமானது தமதுஉறுப்பினருக்கெதிரான பொலிஸ் வேட்டையை நிறுத்துமாறும் ராமிற்கு எதிராக தொடுத்த வழக்கு சோடனையை வாபஸ் பெறுமாறும் கோருகிறது. சோ. தொ. கழகத்துக்கெதிரான தாக்குதல் முழு தொழிலாளர் வர்க்கத்துக்குகெதிரான தாக்குதலின் ஓர் அம்சமாகும். இத்தாக்குதலை எதிர்க்கும் கடிதங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்புக. பொலிஸ் ஆணையாளர் —

தமிழ் நாடு பிராந்திய பொலிஸ்தலைமைகாரியாலயம்
டாக்டர் - ராதாகிருஷ்ணன் சாலை
மற்றாஸ் 600,004, இந்தியா.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொக்கட்டிச்சோலையில் தமிழர்கள் படுகொலை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தொழிலாள வர்க்கமும் ஒடுக்கப்படும் மக்களும் கொக்கட்டிச்சோலைப் படுகொலைகளை வன்மையாகக் கண்டனம் செய்வதோடு, தமிழ் தேசிய இனத்தினரைக் காக்க இனவாத யுத்தத்துக்கு எதிராகக் கிளர்ந்து எழ வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது. இந்த இனவாத யுத்தம் எந்த விதத்திலும் இந்நாட்டுத் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் யுத்தம் அல்ல, 1947-48ம் ஆண்டுகளில் இந்தியத்துணை கண்டப் பிராந்தியத்தில் ஏகாதிபத்திய நலன்களைக் காக்கும் பொருட்டு இனவாத அரசஅமைப்புத்திணிக்கப்பட்டது. இந்தத் திணிப்பு நடவடிக்கையின் அங்கமாகதமிழ் — சிங்கள தேசிய இனத்தினர் பலாத்காரமான முறையில் இணைக்கப்பட்டனர். இதன் நிர்மாணமாகவே முதலாளித்துவ ஒற்றையாட்சி அரசு முறை எழுந்தது. இந்த ஒடுக்குமுறை அரசுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்துள்ள தமிழ் தேசிய இனத்தினரைஒடுக்கித் தள்ளுமுகமாகவே இனவாத யுத்தம் இடம் பெறுகின்றது என்பதை பு. க. க. சுட்டிக் காட்டுகின்றது.

அமெரிக்க ஆளும் வர்க்கம் உட்பட ஏகாதிபத்தியவாதிகள் ஈராக்குக்கு எதிரான யுத்தத்தின் மூலம் காலனித்துவத்தினதும் மூன்றாம் உலக யுத்தத்தினதும் வேலைத்திட்டங்களை அரங்கேற்றியுள்ள தருணத்திலேயே பிரேமதாச அரசாங்கத்தின்இந்தக்காட்டுமிராண்டி யுத்தம் புதிய கட்டத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ஏகாதிபத்தியத்தின் நவகாலனித்துவத்துக்கும் யுத்த வெறி நலன்களுக்கும் சேவை செய்ய வேண்டின், ஒடுக்குமுறைக்கு எதிராகக் கிளர்ந்துள்ள தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும்கிராமப்புறஏழைகளையும் சக்திமிக்க தொழிலாள வர்க்கத்தையும் துடைத்துக் கட்டுவது பிரேமதாச அரசாங்கத்துக்கும் முழு ஆளும் வர்க்கத்துக்கும் அவசியமாகியுள்ளது. இது ஏகாதிபத்திய நலன்களுடன் இணைந்து கொண்டுள்ளது,

இந்த இனவாத யுத்தத்துக்கு ஒரு சதமோ ஒருஆளோ ஒரு கருவியோ வழங்கவே கூடாது! இலங்கைத் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் நிலைப்பாடு இதுவாக விளங்க வேண்டும். தமிழ் ஒடுக்கப்படுவோரின் சுயநிர்ணய உரிமையை வழங்கு! வடக்கு — கிழக்கில் இருந்து இலங்கைப் படைகளை வெளியேற்று! இலங்கைத் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கோரிக்கையாக மேற்கண்டவை விளங்க வேண்டும்.

பிரேமதாச அரசாங்கம் தினசரிவடக்கு-கிழக்கில் காட்டுமிராண்டித்தனமான முறையில் கொன்று குவிப்பது இலங்கைத் தொழிலாள வர்க்கத்தின் சகோதர தொழிலாள ஒடுக்கப்படும் மக்களையே. தம்மை கசக்கிப் பிழிந்து, இரத்தம் உறிஞ்சும் இலங்கை முதலாளி வர்க்கத்தில்இருந்து விடுதலை பெற வேண்டின் இந்நாட்டுத் தொழிலாள வர்க்கம், முதலாளி வர்க்கத்தால் தவிடு பொடியாக்கப்படும் தமிழ் தேசிய இனத்தின் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களைக் காக்க கிளர்ந்து எழ வேண்டும். அவர்களுடன் ஐக்கியம் பூண வேண்டும்.

## யுத்தப் பளு

கடந்த சில மாதங்களாக இந்த இனவாத யுத்தப் பளுக்களை தொழிலாள வர்க்கத்தின் தலையில் கட்டி அடிக்கும் நடவடிக்கையில் பிரேமதாச அரசாங்கம் ஈடுபட்டது. விலைவாசி உயர்வு, வரி உயர்வு, இலவச சேவைகள் வெட்டு என்ற விதத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களை இந்த யுத்தத்துக்கு திரட்டியது. இன்று இந்த யுத்தச் செலவினத்தைக் காட்டி, தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்புக் கோரிக்கைகளைக் குப்பைக் கூடைக்குள் வீசவேண்டும் என்ற முடிவுக்கு பிரேமதாச அரசாங்கம் வந்துள்ளது, சம்பள அதிகரிப்புக் கோரிய இலங்கை ஆசிரியர் சங்கம், மத்திய வங்கி ஊழியர் சங்கத் தலைமைகளுக்குகல்வி அமைச்சுமத்திய வங்கி உயரதிகாரிகள் இதையேகூறியுள்ளனர்: பெருமளவிலான பணத்தை அரசாங்கம் யுத்தத்துக்கு செலவிடுவதால் அரசாங்கம் சம்பள உயர்வு வழங்க முடியாது. இதையே இலங்கை வங்கி, மக்கள் வங்கி அதிபர்கள் இலங்கை வங்கி ஊழியர் சங்கத் தலைவர்களுக்கும் தெரிவித்துள்ளனர்.

உலக வங்கியினதும் சர்வதேச நாணய நிதியத்தினதும் சர்வதேச ஏகபோக நிதி மூலதனத்தினதும், கோரிக்கைகளை ஒன்றுவிடாமல் அமுல் செய்து, தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வயிற்றிலடிக்கையிலேயே இந்த இனவாத வெறியையும் தூண்டி வருகின்றது, கடந்த வாரம் கொக்கலையில் மற்றுமோர் சுதந்திர வர்த்தக வலயத்தினை நிர்மாணிக்கும் வேலைகளை ஆரம்பித்து வைத்த பிரேமதாச, அரசாங்கம், தோட்டத்துறையையும் தொலைத்தொடர்புத்திணைக்களம் உட்பட கூட்டுத்தாபனங்களையும் தனியார்மயமாக்கி, உள்ளூர் — வெளிநாட்டு முதலாளிகளின் சுரண்டல் மயமாக்கும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி உள்ளது. பங்குகள் கைமாறும் போது அறவிட்டு வந்த கட்டணங்களை இரத்து செய்துள்ளதோடு இலாபங்களை வெளிநாட்டுக்கு அனுப்புவதில் இருந்து வந்த அற்பசொற்ப தடைகளையும் இரத்துச்செய்துள்ளது. இதனால் வெளிநாட்டு மூலதனக்காரர்கள் கொழும்பு பங்குமுதல் சந்தைக்குள் பெருக்கெடுத்து வருகின்றார்கள். இதற்கிடையே அரசாங்கம் தோட்டத்துறையில் இலட்சக் கணக்கான தொழில்களை நாசமாக்கும் நடவடிக்கைகளை அமுல் செய்து வருகின்றது.

இதனை யூ. என். பி. அரசாங்கம் வேலைத் தலங்களில் போராளிகளையும் தொழிற் சங்கங்களையும் வேட்டையாடும் இயக்கத்துடன் சேர்த்து செய்து வருகின்றது. தோட்டப் பகுதியில் ஆயுதப் படைகளைக் கொண்ட ஆயுதம் தாங்கிய படைப்பிரிவொன்றுநிறுவப்பட்டுள்ளது. இலங்கை வங்கி ஊழியரின் தொழிற்சங்க நடவடிக்கை பற்றிக்கேள்விப்பட்டதுதான் தாமதம் அரசாங்கம் சங்க அங்கத்தினர்களின் 'பயங்கரவாத' தொடர்புகள் பற்றி ஆராய்ந்து வருவதாகமிரட்டி உள்ளது. தாதிகள் பயிற்சிப் பாடசாலை நிர்வாகிகள், மாணவர்களை வேட்டையாடும் இலக்குடன் அவர்களுக்கு எதிராக இரகசியப் பொலிசாரைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதற்கிடையே தொழிலாளர்களுக்கு தொழிற் சங்கம் அமைக்கும் உரிமை இருந்தாலும் அதை அங்கீகரிக்க முதலாளிகள் கட்டுப்பட்டிருக்க வில்லை என்ற பிரச்சாரத்தினை அரசாங்கம் கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் மூலம் அரசாங்க, தனியார் துறைகளில் தொழிற் சங்க உரிமையை நாசமாக்கும் நடவடிக்கைகளை மேலும் உக்கிரமாக்கியுள்ளது. ரூபா மதிப்பிறக்கம், வர்த்தமானி அறிவிப்புக்கள் மூலம் விலைவாசிகளை உயர்த்தல், மானியங்களை வெட்டுவதன் மூலமும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களின் வாழ்க்கைத் தரத்திற்குக் குழிபறிக்க யூ. என். பி, அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

மறுபுறத்தில் நிலப் பிரச்சினை, வேலையின்மை வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி, வீடில்லாப் பிரச்சினைகளுக்குப் பலிகடாக்களாகியுள்ள ஏழைத் கிராமப்புறவாசிகளை நசுக்கும் பொருட்டு 1 இலட்சம் இளைஞர்களை படுகொலை செய்து, ஆரம்பித்த பயங்கர இயக்கம் இன்னமும் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது,

## 'வொயிஸ் ஒப் அமெரிக்கா'

இலங்கை முதலாளி வர்க்கத்தினர் ஏகாதிபத்தியவாதிகளின் காலனித்துவத்துக்கும் யுத்தவெறி நலன்களுக்கும் உதவும் தமது தயார் நிலையை ஈராக்குக்கு எதிரான, யுத்தத்தின் போது அமெரிக்க விமானப் படைகள் கட்டுநாயக்காவில் தரையிறங்கவும் எண்ணெய் எடுக்கவும் இடமளித்தனர். இன்று இரணவிலவில் 'வொயிஸ் ஒப் அமெரிக்கா' ஒலிபரப்பு நிலையம் அமைத்துக் கொள்ளவும் அங்கீகாரம் வழங்கியுள்ளனர். இந்தியாவில் சூடுபிடித்துள்ள அரசியல் நெருக்கடியின் கீழ் ஏகாதிபத்தியவாதிகளை முழுமனே அணைத்துக்கொள்ள தயாராகியுள்ள இந்திய முதலாளி வர்க்கம், அந்நாட்டினுள் மட்டுமன்றி இலங்கை உள்ளடங்கலானமுழுப்பிராந்தியத்திலும் தொழிலாள — ஒடுக்கப்படும் மக்களின் போராட்டங்களைச் சிதறடிக்க வெறிபிடித்து அலைகின்றது. ஒடுக்கப்படும் தமிழ் மக்களை நசுக்க 1987ல் இராணுவத்தினை அனுப்பியதன் மூலம் நெருக்கடிக்குள் தள்ளப்பட்ட இந்திய ஆட்சியாளர்கள், இன்று ராஜீவ்காந்தி கொலையைப் பாவித்து தமிழ் அகதிகளை இலங்கைக்கு அடித்துக்கலைக்கவும் போராளிகளை யூ. என். பி அரசாங்கத்தின் சித்திரவதை இயந்திரத்திடம் ஒப்படைக்கவும் முயல்கின்றனர்.

பிரேமதாச அரசாங்கத்தின் இனவாத யுத்தத்துக்கு ஆதரவு தரும் சமசமாஜ — கம்யூனிச — நவசமசமாஜ — இ, தொ. கா. தலைவர்கள் அப்பாவிக் குடிமக்கள் கொலை செய்யப்படுவதையிட்டு முதலைக் கண்ணீர் வடிக்கின்றனர். இதன் மூலம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் கண்களில் மண் வீசுகின்றனர். ஆயுதப்படைகள் உரிய முறையில் தொழிற்பட பிரேமதாச அரசாங்கம் இடமளிப்பதாய் இல்லை என்பதே இத்துரோகத் தலைவர்களின் முக்கிய குற்றச்சாட்டாக உள்ளது. இந்நடவடிக்கை இனவாத யுத்தத்துக்கு மட்டுமன்றி, கிராமப்புற ஏழைகளை வேட்டையாடும் பிரேமதாச அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கும் கைகொடுக்கின்றது,

இச்சமயத்தில், அரசாங்கம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதன் அடிப்படையில் நடாத்தும் பேச்சுவார்த்தைகளில்கலந்து கொள்ளத் தாம் தயாராக உள்ளதாக பிரான்சில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்க தலைவரான லோரன்ஸ் திலகர் அறிவித்துள்ளார். இவர்களின் இன்றைய முக்கிய இலக்கு ஏகாதிபத்தியவாதிகளின் ஆதரவினைத் திரட்டுவதாக உள்ளது. இந்நடவடிக்கையானது ஏதேனும் ஒரு ஏகாதிபத்தியச் சக்தியின் ஏஜன்சியாக மாறி, தமிழ் ஒடுக்கப்படும் மக்களைத் தனிமைப்படுத்தி, அரசியல் ரீதியில் நிராயுதபாணிகளாக்குவதாகும்.

இலங்கைத் தொழிலாள வர்க்கம், தமிழ் ஈழம் பிராந்தியங்களில் தொழிலாள வர்க்கத்துடன் ஐக்கியத்தினை உறுதி செய்வதன் மூலம் போராட்டத்தில் குதிப்பதே விடிவுக்கான ஒரே மார்க்கம். தமிழ் ஒடுக்கப்படும் மக்களைக் காக்க முன்நிற்பதோடு, இனவாத யுத்தத்துக்கு அடிமைப்படுத்தி தமது கோரிக்கைகளைக் குப்பைத் தொட்டிக்குள் வீச அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளைத் தோற்கடிக்கத் தொழிலாள வர்க்கம் போராட்டப் பாதையில் குதிக்க வேண்டும்.

## வேலைத்திட்டம்

தொழிலாள வர்க்கத்தினதும், ஒடுக்கப்படும் தமிழ் மக்களதும், கிராமப்புற ஏழைகளதும் இளைஞர்களதும் அமைப்புக்களதும், அமைப்புக்கள் இல்லாத இடங்களில் வேலைத்தல கமிட்டிகளையும் நடவடிக்கைக் குழுக்களையும் அமைப்பதன் மூலம் அவர்களின் பிரதிநிதிகளையும் கொண்ட பேராளர் மகாநாட்டினை உடன் கூட்டப் பிரச்சாரம் செய்ய வேண்டும். இம்மகாநாடு, வட — கீழ் மாகாண இனவாத யுத்தத்துக்கும் கிராமப்புற படுகொலைகளுக்கும், உலக வங்கி — யூ. என். பி. தாக்குதல்களுக்கும் மாணவர்கள் உள்ளடங்கிய இளைஞர்களை நசுக்கும் முதலாளிகளின் தாக்குதல்களுக்கும் எதிராக பொது வேலைநிறுத்தத்துக்கான வேலைத்திட்டங்களைக் கலந்துரையாடி முடிவுகாண வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் இளம் சோஷலிஸ்டுகளும், 'தொழிலாளர் பாதை'யும் வேண்டுகின்றன.

தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை உறுதி செய்தல், கிராமப்புற ஏழைகளின் விவசாயப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணுதல், இளைஞர்களின் உரிமைகளை வழங்குதல் என்பது, முக்கிய முதலாளித்துவகைத்தொழில்களையும் நிறுவனங்களையும் தொழிலாளர் ஆதிக்கத்தின் கீழ் தேசியமயமாக்குதலையும் ஏகாதிபத்திய கடன்களைத் திருப்பிச் செலுத்துவதைப் பகிஷ்கரிப்பதையும் வேண்டிநிற்கிறது. இந்த வேலைத்திட்டத்தினை இப் பேராளர் மகாநாடு கலந்துரையாடி தீர்மானம் எடுப்பது அவசியம்.

உலக சோசலிசப் புரட்சியின் வேலைத்திட்டத்தின் கீழ் இந்தியத் துணைக்கண்ட சோசலிச குடியரசினை நிறுவுவதன் ஒரு பாகமாக யூ. என். பி, அரசாங்கத்தினை வெளியேற்றி, இலங்கை — தமிழ் ஈழம் சோசலிச குடியரசினை நிறுவவேண்டியதன் அவசியம் கொக்கட்டிச்சோலை ஏழைகளின் இரத்தத்தினால் எழுதப்பட்டுள்ளது. இந்த வேலைத்திட்டத்துக்குப் போராடும் பொருட்டு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தினைக் கட்டி எழுப்ப வேண்டும். இத்தலைமையைக் கட்டி எழுப்பும் பொருட்டு 1991 ஜூலை 29ல் கொழும்பு பொதுஜன நூல் நிலைய கேட்போர் கூடத்தில் இளம் சோஷலிஸ்டுகள் கூட்டும் தேசிய மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி நாம் சகல இளைஞர்களையும் வேண்டுகின்றோம்,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இளம் சோசலிஸ்டுகள்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துலகக் குழுவின் இளைஞர் இயக்குமான, 'இளம் சோசலிஸ்டுகள்' அமைப்புபோராடி வருகின்றது. ஏகாதிபத்திய வாதிகளின் காலனிமயமாக் கலுக்கும் உலக யுத்தத்துக்கும் எதிராக உலகப் பாட்டாளி வர்க்கத்தினைத் தயார் செய்யும் போராட்டத்தின் பிரமாண்டமான முன்னேற்பாடாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு 1991 நவம்பர் 16ம் 17ம் திகதிகளில் பேர்ளினில் நடாத்தஅழைப்பு விடுத்துள்ள உலகத் தொழிலாளர் மகாநாட்டினை வெற்றிக்கு இட்டுச் செல்ல 'இளம் சோசலிஸ்டுகள்' போராடுகின்றார்கள்.

உலக ரீதியில் ஏகாதிபத்தியத்தின் முதல் பலிகடாவாக இளைஞர்கள் விளங்கி வருகின்றார்கள். இந்த இளைஞர்களும் தொழிலாளர்களும் தொழிலாள வர்க்கத்தினுள் உள்ள சகல சந்தர்ப்பவாதத் தலைவர்களும் கண்ணெதிரில் ஏகாதிபத்தியம் பக்கம் செல்வதைக் காண்கிறார்கள். இளைஞர்களைத் தவறான வழியில் திசைதிருப்பும்பொருட்டு கடந்த காலத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட மாஓவாதம், காஸ்ட்ரோவாதம், குவேராவாதம் மற்றும் குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்கள் அனைத்தும் இன்று ஏகாதிபத்தியத்தின் எதிரில் அடிபணிந்துள்ளன. எதிரியின் விசுவாசமுள்ள ஊழியனாகி இளைஞர்களுக்கும், தொழிலாளர்களுக்கும் எதிரான துரோகிகளாகியுள்ளனர்.

இளைஞர்களையும் தொழிலாளர்களையும் ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து அப்புறப்படுத்தி இந்த குட்டி முதலாளித்துவ இயக்கத்தின் உள்ளும் ன்டாலினிச, சமூக ஜனநாயக இயக்கங்களினுள்ளும் சிதைத்துக் கரைத்துவிட ட்ரொட்ஸ்கிசத்தில் இருந்து பிரிந்த பப்லோவாதிகள் செயற்பட்டனர்.

இலங்கை, இச்சகல் போக்குக்களும் தொழிலாளர்களையும், இளைஞர்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்து. அவற்றின் வங்குரோத்தினையும் எதிர்ப்புரட்சிப் பணியையும் நிருபித்து வைத்த ஒரு நாடாகும். 1940 களில் நான்காம் அகிலத்தின் கிளையான இந்திய போல்ஷிவிக்—லெனினிஸ்ட் கட்சியின் தலைவர்கள் அக்கட்சியை கரைத்துவிட்டு ட்ரொட்ஸ்கிச 'அனைத்துலக' வாதத்தினைக் கைகழுவிவிட, போலி ட்ரொட்ஸ்கிச சமசமாஜக்கட்சியில் சேர்ந்தனர். இந்தத் தேசியவாத சமசமாஜக் கட்சியின் நாற்றமெடுப்பு 1964ல் முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டரசாங்கத்தில் சேர்ந்ததன் மூலம் உச்சக் கட்டத்தினை எட்டியது. இத்துரோகிகள் தொழிலாளர், இளைஞர் தலைமுறையை தவறான திசையில் திருப்பினர்: அழிவுக்கு இட்டுச் சென்றனர். கிராமப்புற இளைஞர்களை ஈர்த்த ஜே. வி. பி, தலைவர்கள் மாஓ, குவேரா அரசியலில் இருந்து முதலாளித்துவ நெருக்கடியின் உக்கிரத்தோடு வலதுதிசையில் பயணம் செய்து சிங்கள சோவினிசத்தினைச் சுமந்த பாசிச தலைவர்கள் ஆகினர். விடுதலைப் புலிகள் உட்பட சகல தமிழ் குட்டி முதலாளித்துவ தேசியவாத இயக்கங்களின் தலைவர்கள் இன்று ஏகாதிபத்தியத்தின் பின்னால் இழுபட்டுச் செல்கின்றனர்.

ஏகாதிபத்திய சார்பு பிரேமதாச அரசாங்கம் இளைஞர்களைக் கொலை செய்து, டயர் தீச்சுவாலையில் சுட்டுப் பொசுக்குகின்றது. இந்த பயங்கர ஆட்சியைவிட அதனால் இளைஞர்களின் எந்தவொரு நலன்களையும் வழங்கவோ, பேணவோ முடியாதுள்ளது.

இந்நிலையில், சோசலிசப் புரட்சியின் உலகக் கட்சியைக் கட்டி எழுப்ப இளைஞர்கள் தமது சக்தியிலும் எதிர்காலத்திலும் முழு நம்பிக்கை கொண்டு செயற்படவேண்டியுள்ளது. அத்தகைய இளைஞர்களை புரட்சிகர மார்க்சிசத்தின் பதாகையின் கீழ் அணிதிரட்டும் பணியின்ஆரம்பமாக 'இளம்சோசலிஸ்டுகள்' இயக்கத்தின் இந்த 10வது தேசிய மகாநாடு விழங்குவது உறுதி.

## வளைகுடா யுத்தத்தினை...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதாரத்தில் ஆதிக்கத்திற்கான போராட்டத்துக்கு அமெரிக்கா சொந்த மூலோபாயத்தினைக் கொண்டிருக்க வேண்டும் எனவும் இந்த சீ. ஐ. ஏ. அறிக்கை வலியுறுத்தியது.

இந்த வாதப்பிரதிவாதங்களுக்கு மத்தியில் யப்பான் ஐ. நா. பாதுகாப்புச் சபையில் நிரந்தரப் பிரதிநிதித்துவம் வேண்டுமெனவும் ஐ நா. பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாம் உலக யுத்த 'எதிரி' என்ற வாசகம் அகற்றப்பட வேண்டுமென வும் கோரி வருகின்றது. ஐ. நா. நிதி ஒதுக்கீடுகளில் அமெரிக்காவுக்கு (272 மில்லியன் டாலர்) அடுத்த படியாக கூடுதலான தொகையை (105மில்லியன் டாலர்) யப்பானே வழங்கி வருகின்றது. யப்பானின் இப்புதிய பிரச்சாரம் 45 ஆண்டுகளுக்கு மேலாக பாதுகாப்புச் சபையில் தாம் கொண்டிருந்த ஆளுமைக்குப் பெரும் சவாலாக விளங்குவதால் அமெரிக்கா, பிரிட்டன் பிரான்ஸ் இதனை எதிர்த்து வருகின்றன. ஏகாதிபத்திய முகாம்களில் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் கூட்டாக நின்று வந்த கனடா ஐ. நா. உலக யதார்த்தத்தினை உரிய விதத்தில் பிரதிபலிக்க வேண்டின் யப்பானுக்கு ஐ.நா.வில் இந்த இடம் வழங்கப்பட வேண்டும் என்றுள்ளது. சமீபத்திய தனது டோக்கியோ விஜயத்தில் கனடாப் பிரதமர் பிரியன் மல்ரோனிஇதைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே யப்பானியக் கடற்கண்ணி அகற்றும் கப்பல்கள் பாரசீக வளைகுடாவின் வடபகுதியில் இறங்கியுள்ளன. இரண்டாம் உலக யுத்தத்துக்குப் பின்னர், யப்பானிய இராணுவம் யப்பானிய எல்லைகளுக்கு அப்பால் சென்றது இதுவே முதற்தடவை. யப்பானிய மக்களின் பெரும் எதிர்ப்புக்கு மத்தியிலும் இடம்பெற்றுள்ள இந்த இராணுவத்தலையீடு அதனது பரந்தளவிலான பொருளாதார நலன்களைக் காக்கும் பொருட்டு, இராணுவ சக்தியை வலுப்படுத்துவதாக விளங்குகின்றது.

அமெரிக்காவினால், ஜூன் முதல் வாரத்தில் வெளியிடப்பட்ட வர்த்தகப் புள்ளி விவரங்கள், பெரும் ஏகாதிபத்தியச் சக்திகளுக்கு இடையிலான பதட்டம் வளர்ச்சி கண்டுவருவதைக் காட்டியுள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் முதல் தடவையாக அமெரிக்க முதலாளித்துவம் அதனது வர்த்தக நிலுவை நடைமுறைக் கணக்கில் 10.2 பில்லியன் டாலர்களை உபரியாகக் (மேலதிகம்) காட்டியது. கடந்த காலாண்டுக்கான இந்த உபரி உண்மையில் பாரசீக வளைகுடா யுத்தத்தில் வாஷிங்டன் தனது சகாக்களை நிதிக்காக ஆட்டிப் படைத்ததாலேயே கிடைத்துள்ளது. 'பென்டகன்' வெளியிட்ட அறிக்கையின்படி யப்பான், ஜேர்மனி, சவூதி அரேபியா 37.8 பில்லியன் டாலர்களை காசாகவும் 5.1 பில்லியன் டாலர்களை சாதனங்களாகவும் வழங்கியுள்ளன. இந்த பெருமளவிலான பணப் பாய்ச்சல் இல்லாதிருந்திருப்பின் அமெரிக்கப் பொருளாதாரம் பிரமாண்டமான வர்த்தகப் பற்றாக்குறையினைப் பதிவு செய்திருக்கும். உண்மையில் இம் முரண்பாடுகள் யுத்தங்களதும் புரட்சிகளதும்ஒரு புதிய காலப்பகுதியினை ஆரம்பித்து வைத்துள்ளதைக் காட்டுகின்றன.

# தோட்டத் தொழிலாளர் தலைவர்கள்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

யிட்டுள்ளதாக அவர்கள் தம்மைச் சந்தித்த 'தொழிலாளர் பாதை' நிருபரிடம் தெரிவித்தனர்.

இப்பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை சந்திரசேகரனின் சந்தர்ப்பவாத நண்பர்களான முதலாளித்துவ சி. ல. சு. க, சமசமாஜ, கம்யூனிச, நவசமசமாஜ, அரசாங்க லிகிதர் சேவைச் சங்கத் தலைவர்கள் கைது செய்தல் பற்றி முழு மௌனம் சாதித்துக் கொண்டுள்ளனர்.

அத்தோடு இவர்கள் அடையாள வேலைநிறுத்தம் பற்றி ஜூலை 8ம் திகதி (சந்திரசேகரம் உட்பட) கூடி ஆராய இருந்தனர். ஆனால் சந்திரசேகரனின் கைதினைத் தொடர்ந்து பரவிய பயங்கரத்திற்கு அடிபணிந்து, அக்கூட்டத்தினை மெதுவாகக் கைநழுவ விட்டுள்ளனர். இத்தலைமைகளின் இதே துரோக நடவடிக்கைகளுடன் வழிபோய் வந்தவரே இந்த சந்திரசேகரம். கடந்த ஆண்டில் சந்திரசேகரம் கைது செய்யப்பட்ட வேளையில் வேலைநிறுத்தத்தில் குதிக்க தொழிலாளர்கள் ஆயத்தமாகினர். ஆனால் அந்த வேலைநிறுத்தம் தான் விடுதலைபெறத் 'தடையாகும் எனக் கூறி அது வளர்ச்சி பெறுவதைத் தடுத்தார். இம்முறை இடம்பெற்றுள்ள கைது செய்தலுக்கு இந்த இலட்சணத்திலேயே சந்திரசேகரன் வழிவகுத்தார்.

தொழிலாள வர்க்கம் இந்தத் தலைவர்களின் கோழைத்தனமான அடிபணிவினையும் காட்டிக் கொடுப்பினையும் அங்கீகரிக்க முடியாது, அது தொழிலாள ஒடுக்கப்படும் மக்களின் உரிமைகள் உயிர் வாழ்க்கை பற்றிய பிரச்சினையாகும்.

## வேலைத்திட்டம்

★ மலையக மக்கள் முன்னணி தலைவர்களை விடுதலைசெய்யும் பிரேரணையை நிறைவேற்றும்படியும் கூட்டம், மறியல் ஊர்வலங்களை ஒழுங்குசெய்யும்படியும் அடையாள வேலைநிறுத்த, பொது வேலைநிறுத்த தயாரிப்புக்களில் தாமதியாது இறங்கும்படியும் நாம் சகல தொழிலாள வர்க்க அமைப்புக்களையும் சேர்ந்த தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

★ சகல அரசியல் கைதிகளையும் விடுதலை செய் ஒடுக்கு முறைச் சட்டங்களை நீக்கு!

★ தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களின் பந்தோபஸ்திற்காக ஆயுதம் தாங்கிய பாதுகாப்புக் கமிட்டிகளை அமை!

★ சகலதொழிலாள வர்க்க அமைப்புக்களையும், அமைப்புக்களற்ற இடங்களில் வேலைத்தல கமிட்டிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் பேராளர் மகாநாட்டைக் கூட்டு!

யூ. என். பி. அரசாங்கத்தினை வெளியேற்றி இலங்கை — தமிழ்ஈழம் சோசலிசக் குடியரசினை ஆட்சிக்குக்கொணர்வதன் மூலம் சோசலிச வேலைத்திட்டத்தினைஅமுல் செய்ய வேண்டும். அந்த வேலைத்திட்டத்தினைஅமுல் செய்யும் புதிய தலைமையை-நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தை கட்டி எழுப்ப வேண்டும். இந்த இலக்கில் பு. க. க. இளைஞர் இயக்கமான இளம் சோசலிஸ்டுகள் ஜூலை 28ம் திகதி கொழும்பு பொதுநூலக கேட்போர் கூடத்தில் கூடும் 10வது தேசிய மகாநாட்டில் [illegible]

## சோவியத் யூனியன்..

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

பாவுக்கு இடையே கருத்து வேறுபாடுகள்ஏற்பட்டுள்ளது. சோவியத் பொருளாதாரத்தினுள் ஊடுருவவும், முதலாளித்துவத்தினை புனருத்தாரணம் செய்யவும் பெரும் முன்னேற்றம் கண்டுள்ள ஜேர்மன் ஏகாதிபத்தியம், கொர்பசசவின் லண்டன் வருகைக்காக வாதிட்டது.

சோவியத் தொழிலாள வர்க்கம், இந்தத் தலைவிதியை மார்க்சிச அனைத்துலகப் புரட்சிகர சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் போராடுவதன் மூலமே தவிர்க்க முடியும். தொழிலாள வர்க்கம், ஒட்டுண்ணி அதிகாரத்துவத்தினை அரசியல் புரட்சி மூலம் தூக்கி வீச வேண்டும்: அதன் மூலமே 1917 அக்டோபர் புரட்சியின் அவசியமான தேட்டங்களைக் காக்கவும் உலக சோசலிசப் புரட்சியூடாக அவற்றுக்கு புதுத் தெம்பூட்டவும் முடியும். இந்த வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் சோவியத் பகுதியைக் கட்டி எழுப்புதல் அவசியம்.

# தொழிலாளர் பாதை

## சந்தாதாரர் ஆகுங்கள்!

அஞ்சல் கட்டணம் உட்பட
''தொழிலாளர் பாதை'' சந்தா விபரம்:

| | |
|---|---|
| 1 மாதம் — ரூ. 6.00 | 3 மாதம் ரூ...—. 12.00 |
| 6 மாதம் — ரூ. 36.00 | 1 வருடம்...— ரூ. 72.00 |

பெயர் :..........................................

முகவரி :..........................................

சந்தாக் காலம் :.............. ரூ............ சதம்.........

சந்தாப் பணத்திற்காகிய அஞ்சல் அல்லது காசுக் கட்டளையுடன் நிரப்பிய இப்பத்திரத்தை அனுப்பி வைக்க வேண்டிய

முகவரி:

நிர்வாகி,
''தொழிலாளர் பாதை''
இல. 90, 1-வது மாளிகாகந்தை ஒழுங்கை,
கொழும்பு — 10,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீ - நோர் சீ. எம். யூ. தலைவர்கள்

## தம்புவினால் அலுவலகத்தில் இருந்து வெளித்தள்ளப்பட்டனர்

சீ-நோர் சீ.எம்.யூ. கிளைச் சங்கத் தலைவரையும் உப-தலைவரையும ஜுன் 21ல் தலைமைக் காரியாலயத்தில் இருந்து வெளியேற்றி, சீ — நோர் தொழிலாளர்களின் கோரிக்கைகளைக் குப்பைக் கூடைக்குள் விசிய பாலா தம்பு தலைமையிலான தலைவர்களின் கடைகெட்ட துரோக நடவடிக்கையைப் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும் 'தொழிலாளர் பாதையும்' வன்மையாகக் கண்டனம செய்கின்றன.

இந்தத் தொழிலாளர் பிரதிநிதிகள், வடக்கில் யூ.என்.பி. அரசாங்கம் நடாத்தி வரும இனவாதப் படுகொலை யுத்தத்தினால் 1990 செப்டம்பரில் இருந்து சம்பளக்கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டு, தொழில் உரிமை பேராபத்திற்கு முகம் கொடுத்த நிலைமையிலேயே 1991 மே 19ல் கொழும்பு வந்தனர். சங்கத் தலைமைப் பீடத்துக்கு தமது அவலங்களை எடுத்துக் கூறி, அவர்கள் அனுப்பிய கடிதங்களுக்கு எதுவித பலனும கிடைக்காததைத் தொடர்ந்து, சங்கத்தினை போராட்டத்தில் இறக்கும் எதிர்பார்ப்புக்களுடன் அவர்கள் கொழும்புவந்திருந்தனர். இனவாதப் படைகளின் குண்டு வீச்சு விமானங்கள் நடாத்தி வந்த குண்டுமாரிகளுக்கு மத்தியில் இப்பிரதிநிதிகள் இதற்கு முன்னரும் இருதடவைகள் சீ. எம். யூ. தொழிலாளர்களதும், மற்றும் தொழிற்சங்கங்களதும் ஆதரவினைத் திரட்டும் பொருட்டு கொழும்பு வந்துசென்றனர். அவர்களின் வருகையைத் தொடர்ந்து சங்கம் மேற்கொண்ட தலையீட்டால் 1991 மார்ச்சில் மட்டும் சீ-நோர் பவுண்டேசன் ரூபா 3000/- ஐ அலவன்சாக தொழிலாளர்களுக்கு வழங்கியது.

வடக்கில் பசி, பட்டினி, மரணத்துக்கு முகம் கொடுத்துள்ள பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் ஒரு பகுதியினர் என்ற விதத்தில் பிரச்சினைக்கு தீர்வுகண்டு திரும்புமாறு சீ, எம். யூ. அங்கத்தினர்கள் விடுத்த பணிப்புடன் கொழும்பு சீ.எம்.யூ. தலைமை அலுவலகத்துக்கு வந்த கிளைச் சங்கத் தலைவருக்கும், உப—தலைவருக்கும் தம்புவின் பதில் என்ன தெரியுமா? ''பிரச்சினை பற்றி நடவடிக்கை எடுப்பதால்'', ''யாழ்ப்பாணம் திரும்பு'' என்பதே, தம்புவின் வார்த்தைகளை நிராகரித்த இவர்கள் வழக்கம் போல் தமது பாதுகாப்பினையும், உரிமையினையும் அனுபவித்த வண்ணம் சீ. எம். யூ, வைத் தலையிடச் செய்யத் தலைமைஅலுவலகத்திலேயே தங்கினர்.

தம்பு, தொழிலாளர் தலைவர்களினை ஏமாற்றும் ஒரு செப்படி வித்தையாக கடற்தொழில் அமைச்சுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதத்தின் பிரதியினை விடுதலைப் புலிகள் தலைமையிடம் ஒப்படைக்குமாறு கொடுத்து, அவர்களை சீ. எம், யூ. அலுவலகத்தில் இருந்து வெளியேறி, யாழ்ப்பாணம் செல்லுமாறு தம்பு மட்டுமன்றி அவரின் கையாட்களான சீ. எம். யூ. தலைவர் பீ. லியனகே, உப-செயலாளர் ஜெகநாதனும் தினமும் நெருக்கி வந்தனர். தம்பு அமைச்சுக்கு எழுதிய கடிதம், யுத்தத்தினால் உற்பத்தி தடைப்பட்டு சீ-நோர் தொழிலாளர்களுக்கு இந்நிலைமை ஏற்பட்டுள்ளதால் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் 'பேசித் தீர்வு'காண வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளது. முதலாளித்துவ அரசினைக் காக்கும் பொருட்டு, முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு வக்காலத்து வாங்கும தம்புவின் நடைமுறையைப் பொறுத்தமட்டில் இது முற்றிலும் பொருத்தமானது. ஆனால் தமிழ் விடுதலைப் போராட்டத்தினை இரத்தத்தில் மூழ்கடிக்கும் இலங்கை முதலாளித்துவத்திடமிருந்தும் அதன் அரசாங்கத்திடமிருந்தும் தமக்கு எந்தவிதமான தீர்வும் கிடையாது எனவும், ஏகாதிபத்திய - முதலாளித்துவ ஆட்சியாளர்களின் பின்னால் இழுபட்டுச் செல்லும் வங்குரோத்துவிடுதலைப் புலிகள் தலைமையால் 'தீர்வு' காண முடியாது என்பதையும் தமிழ் தேசிய இனத்தினைச் சேர்ந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் தினமும் அனுபவவாயிலாகப் புரிந்துகொண்டு வருகின்றார்கள், யூ.என்.பி. அரசாங்கம் யுத்தத்தினை நிறுத்தாது விடின், அடுத்தது என்ன? சீ— நோர் தொழிலாளர்களின் தலைவிதி என்ன? தம்பு இந்தப்பிரச்சினைகளையிட்டு முற்றிலும் மௌனம் சாதிக்கிறார். இது தம்புவின் பிற்போக்கினையும், மோசடியினையும் எடுத்துக்காட்டுகின்றது.

பக்டரிஸ்ய மூடும் ஆபத்து வெளிப்பட்ட நிலையில் ஜுன் 20பதாம் திகதி கூடிய சீ. எம். யூ, பொதுச்சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சீ — நோர் பிரச்சினையையும் சேர்த்துக் கொள்வதைத் தம்புவும் அவரது செயற் குழுவும் நிராகரித்தன. சீ-நோர் கிளைச் சங்கப் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் சீ-நோர் தொழிலாளர் பிரச்சினை ஆய்வு செய்யப்பட வேண்டும் எனக் கோரி வந்த வேளையில் தம்புவின் கையாளும் பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை சீ, எம். யூ. கிளைச் சங்க மாஜி செயலாளருமான ஜெகநாதன், பக்டரி தொழிலாளர்கள் நஷ்டஈடு வழங்கி வேலை நீக்கம் செய்யப்படவுள்ளதாகவும், நஷ்டஈட்டுக்கு காத்துக்கிடப்பதாகவும் கூறினார், இந்நிலையில் சீ-நோர் தலைவர்கள் பொதுச்சபைக் கூட்ட நிகழ்ச்சி நிரலில் சீ-நோர் பிரச்சினை உள்ளடக்கப்படவேண்டும் என எழுத்து மூலம் கேட்டுக் கொண்டனர். இப்போராளிகளின் நடவடிக்கை தம்புவையும் அவரது சகாக்களையும் கிடுகிடுங்க வைத்தது.

### குறுக்கு விசாரணை

ஜுன் 20ம் திகதி கூடிய சீ. எம். யூ. செயற்குழுக் கூட்டத்தில் சீ-நோர் தலைவர்களை அழைத்து குறுக்கு விசாரணை நடாத்திய தம்பு, இரண்டு இரவுகளுக்கு மேல் சீ. எம். யூ. அலுவலகத்தில் தங்கக் கூடாது எனக் கட்டளையிட்டார், அத்தோடு பொதுச்சபைக் கூட்டத்தில் சீ-நோர் பிரச்சினையை முன்வைக்க இடமளிக்கப்படும் எனப் பொய் கூறி, அவர்களை அங்கிருந்து வெளியேற்றினார். கூட்டுப்படைகள் தலைமையகத்தில் (ஜுன்21) இடம்பெற்ற குண்டு வெடிப்பினைப் பாவித்து கொழும்பில் இனவாத ஒடுக்குமுறையை முடுக்கிவிட அரச படைகள் களத்தில் இறக்கப்பட்ட சமயத்திலேயே இவர்கள் தம்புவினால் வெளியேற்றப்பட்டனர்.

சீ - நோர் தொழிலாளர் தலைவர்கள் பொதுச் சபை உறுப்பினர்களைச் சந்திக்க வேலைத்தலங்களுக்குச் செல்லவுள்ள தமது தொழிலாள வர்க்க உரிமையைப் பயன்படுத்த, புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத் தோழர்களின் உதவியைப் பெற்றதையும், சீ. எம். யூ. உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு காட்டியதையும் தம்பு 'கிரிமினல்' குற்றங்களாகக் கணித்தார். அத்தோடு இதற்கு எதிராக அவர்களை வேட்டையாடவும் முயல்கிறார். ஆனால் இதே தம்பு, சீ. எம். யூ, தொழிலாளர்களைக் கலந்தாலோசிக்காமல் வியட்னாம் மக்களின் கொலைகாரனான றொபேட் மக்னமாராவைச் சந்தித்தார் 1967 தோட்டத் தொழிலாளர் வேலைநிறுத்தத்தின் மத்தியில் பிரித்தானிய உயர்ஸ்தானிகரை, தொண்டமானுடன் சந்தித்தார், பாசிச உறவுகள் கொண்ட ஹென்றி கீசிங்கருடன் 'தேநீர்' கலந்து கொள்ள மேற்கு ஜேர்மன தூதரகம் சென்றார். சமீபகால உதாரணமொன்றினைக் குறிப்பிடுவதானால், சீ. எம். யூ. தலைவியான விக்கிரம சூரியவை மனித உரிமைகள் பேணுவதற்கான பரிசினை 'ஏகாதிபத்திய கொலையாளியான ஜிம்மி கார்ட்டரிடம் இருந்து பெற்றுக்கொள்ள அனுப்பி வைத்தார். இந்த இலட்சணத்தில் தான் தம்பு சீ-நோர் தலைவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டினை முன் வைத்தார்.

இந்த வேட்டைக்கு எதிராக சகல சீ.எம்.யூ. அங்கத்தினர்களையும் கிளர்ந்து எழுமாறும், சீ — நோர் சீ.எம்.யூ. தலைவர்கள் சீ, எம். யூ தலைமை அலுவலகத்தில் இருந்து வெளியேற்றப்பட்டதைக் கண்டிக்கும் பிரேரணைகளை நிறைவேற்றுமாறும், வடக்கு—கிழக்கிலும் மற்றும் மாகாணங்களிலும் உள்ள தொழிலாளர்களை ஏகாதிபத்திய—முதலாளித்துவ கையாட்களின் தாக்குதலுக்கு எதிராக இணைந்த போராட்டத்தில் ஈடுபடுத்த சீ.எம், யூ பினுள் பிரச்சாரத்தை ஆரம்பிக்குமாறும் ஏகாதிபத்திய— முதலாளித்துவ அபிலாசைகளுக்கு அடிபணிந்த தலைமையைத் தூக்கி வீசி, தொழிலாள வர்க்கத்தின் நலன்களுக்காகப் போராடும் தலைமையை கட்டி எழுப்ப இணையுமாறும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் வேண்டுகின்றது.

## இந்திய முதலாளித்துவம்.,.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### புதிய உறவுகள்

வளைகுடா யுத்தம் ஆசியாவில் சகல தேசிய முதலாளி வர்க்கங்களதும் 'ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கை' நடிப்புக்களையும் அம்மணமாக உரிந்து காட்டியுள்ளது. ஈராக்குக்கு எதிரான ஐ, நா, பிரேரணைகள் அனைத்துக்கும் ஆதரவளித்ததன் மூலம் இந்திய முதலாளி வர்க்கம் அமெரிக்க ஏகாதிபத்தியத்துக்கு பூரண அரசியல் ஆதரவினை வழங்கியது. இந்திய முதலாளி வர்க்கத்தின் இக்கொள்கைமாற்றங்கள், இந்தியா தொடர்பான ஏகாதிபத்தியங்களுக்கு இடையேயான போட்டியை புதிய உச்சக்கட்டத்துக்கு கொணர்ந்துள்ளது. ஜேர்மன் ஜனாதிபதிரிச்சார்ட் வைசக்கர் இந்தியாவுடனான 'பாரம்பரிய பங்குடமையை, ஊர்ஜிதம் செய்ய அங்கு விஜயம் செய்ததோடு 174 மில்லியன் மார்க் கடனுக்கான கூட்டு ஒப்பந்தத்திலும் (1991 2/20) கைச்சாத்திட்டார். இதில் இந்தியா 100 பில்லியன் மார்க்குகள் பெறுமதியான உரத்தினை ஜேர்மனியில் இருந்து இறக்குமதிசெய்ய வேண்டும். மிகுதி 70 மில்லியன் மார்க் கடன் வசதி 'கலப்பு கடனாக' வழங்கப்பட்டுள்ளது, இதில் 50 மில்லியன் ஏற்றுமதிக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, அங்ஙனம் இந்தியாவில் இருந்து ஜேர்மனிக்கு ஏற்றுமதியாகும் பொருட்களின் விலையை நிர்ணயம் செய்யும் உரிமையை ஜேர்மனியே கொண்டிருக்கும் அமெரிக்க, ஜேர்மன் உறவுகள் பிரித்தானியாவை தனது பாரம்பரிய உறவுகளை புதுப்பித்துக் கொள்ளச் செய்ததோடு 1947ல் இந்தியா பலாத்காரமாக காஷ்மீரை இணைத்துக் கொண்டதை அங்கீகரிக்கும் 1972ம் ஆண்டின் சிம்லா உடன்பாட்டின் அடிப்படையில் முதற்தடவையாக இந்திய நிலைப்பாட்டை' அங்கீகரித்துள்ளது.

### இன்றைய தேர்தல்கள்

மூன்று முக்கிய முதலாளித்துவக் கட்சிகளிடையே உபாயம் தொடர்பாக என்னதான் கருத்து வேறுபாடுகள்இருந்த போதிலும், இந்தியப் பொருளாதாரம் பன்னாட்டு மூலதனங்களுக்கு திறந்துவிடப்படவேண்டும் என்பதில் அவை உடன்படுகின்றன, காங்கிரஸ் கட்சி கடந்த 10 ஆண்டுகளாக கட்சி மகாநாட்டினை நடாத்த முடியாதுள்ளதோடு இந்திய தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை ஏகாதிபத்திய நெருக்கடியின் புதிய தேவைகளுக்கு ஏற்ப சுரண்டும் யோக்கிய தாம்சம் அதற்குண்டா என்ற சிக்கலையும் இந்திய முதலாளி வர்க்கத்திடையே உண்டுபண்ணியுள்ளது. இது அவர்களை புதிய பதிலீட்டைத் தேட வைத்துள்ளது. ஹிந்து சோவினிசத்தினை அடிப்படையாகக் கொண்டு குட்டி முதலாளித்துவத் தட்டினரை அணிதிரட்டும் பாரதீய ஜனதா கட்சியை காங்கிரஸ் கட்சிக்கான ஒரு பதிலீடாக அவர்கள் தயார் செய்து கொண்டுள்ளனர்.

தொழிலாள வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் நாடு தழுவிய கிளர்ச்சி எழுச்சிகள் பா, ஜ, கட்சியின் இனவாத 'ராமும் ரொட்டியும்' சுலோகத்தினால் திசை திருப்பப் பட்டதோடு, அதன் அயோத்தி பாத யாத்திரை முதலாளித்துவ முறையின் மேல் தொழிலாள ஒடுக்கப்படும் மக்களதும் நியாயமான ஆத்திரத்தினையும் வெறுப்பினையும் திசை திருப்புவதாக உள்ளது. கிழண்டிப் போன அத்வானியின் இடத்துக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்ட பாரதீயஜனதா கட்சி தலைவர் டாக்டர் ஜோசி, ''தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் தீர்மானங்கள் தலையிடா விதத்தில் பாராளுமன்ற ஆட்சியை நடாத்தும் முறையில் அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்'' என்றுள்ளார். அத்தோடு சிறுபான்மை, பிரிவினைப் போக்குகள் அரசாங்கத்துக்கு ஒரு அச்சுறுத்தலாகா வண்ணம் இன்றைய ஆட்சி திருத்தப்பட வேண்டும் எனவும் ஜோஷி குறிப்பிட்டுள்ளார். இந்த சகல முதலாளித்துவக் குழுக்களதும் முக்கிய இலக்கு 1947ன் இரத்தக்களரியை விடப் படுமோசமான மோதுதல்களை இந்தியாவில் சிருஷ்டிப்பதே.

ஸ்டாலினிசமும், குட்டி முதலாளித்துவ தேசிய வாதமும் மத்திய கிழக்கு யுத்தத்தின் போதும் அதன் பின்னரும் வகித்த பாத்திரம் இலட்சோப இலட்சம் தொழிலாள, ஒடுக்கப்படும் மக்களை இந்த அரசியல் சக்திகளில் அடியோடு நம்பிக்கையிழக்கச் செய்துவிடன. இந்த ஒடுகப்பட்ட நாடுகளில் நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட, புரட்சித் தலைமையை கட்டி எழுப்புவது தொழிலாள வர்க்கத்தின் உடனடிப் பணியாகும். பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தினால் மட்டுமே முற்றுப் பெறாத ஜனநாயகப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியும். இந்தியாவில் சோசலிசத் தொழிலாளர் கழகமும் இலங்கையில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகமும், நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் தலைமையில் புதிய புரட்சித் தலைமையை கட்டி எழுப்பும் பணியில் ஈடுபட்டுள்ளன.

கொழும்பு—10, 1ஆவது மா[illegible] வசிக்கும் ஆனந்தவக்கும்புறவினால் மஹரகம நாகஹவத்தை [illegible] அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org